[illegible]

தொகுதி 7 பகுதி 3

Oct 1933

JL

892.11, N27S1K

M33·7·3

186932

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.



OFFICE OF THE REGISTRAR OF ...
16 FEB 1934
MADRAS

# சிவநேசன்

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு ௭. § ஸ்ரீமுக—ஐப்பசி : 1933—அக்டோபர் § திங்கள் ௩.

உள்ளுறை. பக்கம்.

௧. எற்றமுறும் வழிகள் ... 41
௨. இரங்கற்பாக்கள் ... 43
௩. சரித்திர புராணங்கள் ... 45
௪. சிவோத்கர்ஷம் ... 48
௫. அப்பைய தீக்ஷதர் மகிமை ... 53
௬. பொன்னேரிச் சந்திப்புவிழா ... 56
௭. தையல்சொற் கேளேல் ... 59
௮. சிவபஞ்சாக்கரம் ஜெபித்தலின் பலன் ... 60
௯. சிவத்தினியல்பு ... 64
௰. திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா (முகவுரை: ஆராய்ச்சிக்குறிப்பு முதலியன)
௧௧. இருபாவிருபஃது ... 17—24

ஆசிரியர் ராம. த. ராம. இராமசாமி செட்டியார்,
பலவான்குடி.

# செய்தித்திரட்டு.

**உள்ளூர்:**—புரட்டாதி ருஉ சிவாலயத்தில் நவராத்திரி விழாத் தொடங்கி, அம்பிகை கொலுவீற்றிருந்து, கூஉ விஜயதசமியன்று குதிரைவாகனத்தில் எழுந்தருளி அம்பெய்து அன்பர்களுக்கு வெற்றிதந்தருளின… வித்தியாலயங்களிற்பயிலும் மாணவர்கள் புரட்டாதி சஉ கிலுக்குளடுத்த… கஉ சரஸ்வதிபூசைபுரிந்து, கூஉ விஜயதசமிவிழாக் கொண்டாடின… குமாரவிநாயகர் திருக்கோயிலில் புரட்டாதி கஎஉ சதுர்த்தசியன்று நட… ஜாபிடேகம் நடைபெற்றது.

இம்மதி கஉ சிவாலயத்திலிருந்து சுவாமி தேனாற்றுக்குளெழுந்தருளி… தீர்த்தம் கொடுத்தருளினர். கூயஉயும் இவ்வாறே தீர்த்தங் கொடுத்தருள… வர்.

இம்மதி கூஉ பிள்ளையார்கூடத்துக்கு முன்பாக, ஆத்தங்குடி சநாதன… தர்ம மகாசபையார் கூட்டங் கூட்டிப் பிரசங்கங்கள்புரிவித்துத் தீர்மான… கள் நிறைவேற்றினர்.

**தென்றுக்குடி;**—கந்தர்சஷ்டி விழா இம்மதி கூஉ தொடங்கி நடைபெறு… கிறது. நாளை சூரசம்மாரமும், கூஉ தெய்வயானையம்மையார் திருமண… வைபவமும் நடைபெறும்.

**மகாசிவநேசர் வரவு:**—அனவரதமும் சிவனை மறவாச் சிந்தையர… கிய மகாசிவநேசப் பெருந்திருவாளர் அரிமழம் அ. அரு. அண்ணாமலை… செட்டியாரவர்கள், மூப்பினிலிருந்து ரெங்கோன் வந்து புரட்டாதி உஅ… வங்கமேறி, கூகஉ சென்னைத் துறைமுகம் வந்து, ஐப்பசி கஉ திருவொற்றி… யூரிற் சுவாமி தெரிசனமும், அங்கிருந்து காஞ்சீபுரம் சிதம்பரம் முதலான… திருத்தலசேவையும், எஉ வைத்தீஸ்வரன் கோவிலில் வழிபாடும் செய்து… அஉ ஆங்குப் பிரார்த்தனை நிறைவேற்றி, கூஉ பழநியம்பதியில் திருக்க… யாணசேவை தெரிசித்து, திருப்பெருந்துறைக்கு வந்து சிவயோகாம்பிக… சமேத ஆன்மநாதரையும் அருள்வாதவூரடிகளாகிய மணிவாசகரையு… தெரிசித்துத் தமது தரும நிலையங்களின் பரிபாலனங்களைக் கவனித்து… கொண்டு ஆப்தர்களுடன் அரிமழத்தில் தமது மாளிகைக்கு வந்து சே… வார்கள். பர்மாவுக்குச் சென்று அங்கு தங்கள் காரியாதிகளை நன்கு கவனி… துத் திருவருள் நலத்தால் சிந்தாயாத்திரையாய்த் திரும்பிவந்துசேரு… மாசிவநேசத் திருவாளரின் வரவு பெருமகிழ்ச்சிக்கு உரியது.

**ஆவினிப்பட்டி:**—விவேகாநந்தர் கல்விக்கழகத்தில் நவராத்திரி விழ… நன்கு கொண்டாடப்பெற்றது. மாணவர் சிவன்கோவிலில் பஜனைசெ… தனர்.

ஏழாம் ஆண்டு சு-ம் மாதக்கூட்டம், 2—10—33 ன் மாலை, இளை… சிவப்பட்டி சாண்டோ திரு. மு. லெ. சோமசுந்தரச் செட்டியார் த… மையில் நடைபெற்றது. கடவுள் வாழ்த்துக் கூறியதும், தலைவர் முன்… ரையாகச் சில இன்னுரை வழங்கினர். சூரியன், பாரியும் மாரியும், கடவி… நன்மை, விவேகானந்தரும் பெண்களும், சரீரசௌக்கியம், நமது உட… பின்தோல் என்பனபற்றி மாணவர்பேசிச் சபையைக் களிப்படையச்செய்… னர். நீரின்தன்மை, படிப்பு என்பனபற்றிய இருசொல்லாடல்களும் ந… பெற்றன. தலைவர் சொற்பொழிவின் சிறப்பைப் பாராட்டியும், பெற்… சமுகமளித்துக் கேள்விச்செல்வம் பெறவேண்டிய அவசியத்தையும்வின… முடிப்புரை பகர்ந்தார், ஆசிரியரால் வந்தனமளிக்கச் சபை நிறைவுற்ற…

உ
சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்குக.

16 FEB 1934
MADRAS

# சிவநேசன்.

## செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

| ஆண்டு எ | பலவான்குடி—ஸ்ரீமுக—ஐப்பசி | திங்கள் ரு. |
| --- | --- | --- |

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும்அரு ளைப்புரி யாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

## ஏற்றமுறும் வழிகள்.

உலகில் வாழும் மக்கள் பலரும், தளர்ச்சி நீங்கி வளர்ச்சி பெற்று ஏற்றமுறவே விரும்புவர். ஆயினும், ஏற்றமுறும் பேற்றுக்குரிய துறைகளை முறையே தெரிந்துகொள மாட்டாமையால் தளர்ச்சியுற்று தவிப்பவரே பலராய் நிலவுகின்றனர். யார் யார் எந்தெந்த வழிகளில் முயன்று ஏற்றமுறலா மென்பதைச் சிந்தித்துத் தெளியினன்றே ஏற்றம் பெறலாம்.

கீழ்மக்களெனக் கருதப்பெறும் பஞ்சமர்கள் பஞ்சிநூற்று நெய்து துணிவிற்றுச் சீவிப்பாராயின், திருவள்ளுவர் செயலைக் கைப்பற்றினவர்களாய்—மக்கள் பலர்க்கும் தாங்கள் ஆடை யுதவி மானங்காக்கும் மாண்பினர்களாய்க் கூறைவாணிகப் பெயருடன் நிறைவாழ்வு பெற்று ஏற்றமுறலாகாதா?

மயிர் வினைஞராகிய மருத்துவர்கள், மருத்துவசாலைகள் வைத்து மருத்துவம் புரிந்து, மக்கள் நோய்வாய்ப்பட்டு மாயாமல் பிணி தவிர்க்கும் பிதாவாகி மருந்துசெய்யத்தெரியாத மருத்துவர்களாகிய ஆங்கில டாக்டர் பட்டதாரிகளைத் தோற்கடித்து, மருத்துவர்—பண்டிதர் என்னும் தமக்குரியவம் பட்டப் பெயர்களை அழியாமற் காத்து ஏற்றமுறலாகாதா?

தொழுதுண்டு வாழ்வோ ரெல்லாம் உழுதுண்டு வாழ்ந்து, "மேழிச் செல்வம் கோழை படாது" என்றப்படி சீவாதாரமாகிய தானியப்பொருள்களை மலைபோற்குவித்து, உலகத்து ஆணிபோல் நிலவி உதவிபுரிந்து ஏற்றமுறலாகாதா?

186932

கள்ளாட்டயர்வோர் கள்ளாடித் தவிக்கும் குடிமயக்கத்திலீடு பட்டுப் பொருளிழந்து அறிவிழந்து செயலிழந்து மானமிழந்து அருளிழந்து தவிக்காமல், பெருநஞ்சினுங் கொடிய கட்குடியை விடுத்து நல்லமுதருந்தித் தமது உழைப்பினால்வரும் ஊதியத்தைச் சிக்கனஞ் செய்து சேமித்தால், பெரும்பொருளாளராக—பிறரெல்லாம் மதிக்கும்படியாக ஏற்றமுறலாகாதா?

காப்பிக்குடியர்கள் கள்ளுக்குப்பின் காலேறிய அக் குடியின் கொடுமையையும், அதனால் ஏழை முதற் செல்வர்களீறாக யாவரும் படும் பாட்டையும் சிந்தித்துத் தெளிந்து அத் தீமையை யொழித்தால், கைப்பொருள் காக்கப்பெற்று ஏற்றமுற லாகாதா? அரிசி விற்பனையும் செய்யப்படாதென்னும் ஆணைக்கு உட்படவேண்டிய பார்ப்பனர்கள், அன்னபானீயமும் விற்கும் நிலைக்கு வந்த சிறுமையகன்று, அந்தணவொழுக்கத்திற் சிறந்து ஏற்றமுற லாகாதா? அதனால், பால் தயிர் நெய் ஆதிய பல பொருள்களையும் சுயமாயும் மலிவாயும் பெற்று மக்கள் யாவரும் ஏற்றமுற லாகாதா?

புலையுங் கொலையும் களவும் தவிர்ந்து ஆசாரம் போற்றப் பெறின், யாவரும் பூசுரராக ஏற்றமுற லாகாதா?

ஒருவர்க்கொருவர் துவேஷங் கொள்ளாமலும், துவேஷத்தை யுண்டுபண்ணாமலும், அன்புரிமையுடன் தத்தம் நிலை பிறழாது சன்மார்க்கநெறியிலொழுகிச் சுதந்திரவாழ்வுபெற்று ஏற்றமுறலாகாதா?

இன்னும், இயந்திர வூர்திகள் இரத்நாபரணங்கள் சரிகையுடைகள் ஆதிய ஆடம்பரச் செலவுகளை யடக்கியும், பெரும்பெருஞ் செலவில் உத்தியோகப் படிப்பை யெல்லோரும் கற்க வேண்டுமென்ற ஏக்கத்தை விடுத்தும், வியபிசாரம் வஞ்சம் பொய் சூது ஆதிய தீமைகளைத் தவிர்த்தும் வரவுக் கியைய அமைதியான வாழ்க்கைமுறையை மேற்கொண்டு ஏற்றமுற லாகாதா?

பெரியோர்களே! பேரன்பர்களே! "உழைப்பின் வாரா வுறுதிக ளுளவோ? களைப்பின் வாராக் கையறவுளவோ?" என்றருளிய பெரியாரின் அருட்டிரு வாக்கியங்களை அன்புடன் படித்துங் கேட்டும் கடைப்பிடித் தொழுகி அஞ்ஞானம் நீங்கி மெய்ஞ்ஞான நாட்டமுடையராய் வாழ்வுதாழ்வுகளில் மகிழ்ச்சி வாட்டமின்றிக் கனவினும் நனவினுங் கடவுளைமறவாது உண்மைநெறியில்உழைத்து இவ்வுலக இன்பத்தையும், இவ் வுலகாதீதப் பேரின்பத்தையும் பெற்று ஏற்றமுறலாமென்பது ஒருதலை. அவ்வாறே மக்கள்யாவரும் வளர்ச்சிமிக்கோங்கி ஏற்றமுற, சூர்முத றடிந்த வெற்றிவேற்கடவுளாகிய ஆறுமுகக்கடவுளின் வீறுடைக் கழலை விழைந்திறைஞ்சுவோமாக!

உ

# இரங்கற்பாக்கள்.

அமராவதிபுதூர்

பரம்பரைத் திருப்பணிச் செல்வர் வழித்தோன்றலும்

மகாவித்வ சிரோமணியும் ஆகிய

திருவாளர் வயி. நாக. ராம. அ. இராமநாதச்செட்டியார்

தமது அருமை மனைவி

திருமதி வள்ளியம்மையாச்சி சிவகதி யடைந்தபின்

பிரிவாற்றாமை குறித்துக் கூறியவை.

தென்னையென வாழைவளர் அரியைச்சாத் தப்பசமுத் திரத்திற் செய்ய
பின்னையெனப் பிறந்தெனக்கு மனைவியென வந்ததவப் பேறே! பெற்ற
அன்னையென அன்பான்மிக் கன்புடைய வள்ளியம்மே! யகன்றாய் துன்பம்
என்னையெனஎடுத் துரைக்கேன்தடுத் துரைக்காக்குணமெங்கேவகிற்றந்தோ!

செப்புவைக்குந் தனமடவார் கணவனிழந் தாற்கண்ணீர் சிந்திச் சிந்தி
ஒப்புவைக்கு மதுபோல ஒப்புவைக்கேன் ஒப்புவைக்கா வுங்கட் கென்பாய்
அப்புவைக்குஞ்சடைமுடியானடிக்கணென்கண்முன்புகுவதறிந்தேனல்லேன்
உப்புவைக்குங் கடற்புவிமா தொப்புவைக்கும் பொறையெங்கே யொளித்த
[தந்தோ!

குயிலாய மொழிமடந்தா யெனைமணந்தாய் பதிவிரதைக் கொம்பே! தாவும்
எயிலாய புரமூன்று மெரித்தபிரான் றிருக்கோயி லெல்லாம் பல்கால்
மயிலாய இளஞ்சாயற் பெடையேபோற் றொடர்ந்துதொழ வருவா யின்று
கயிலாய மும்பாட லுடைத்தென்றோ தனித்தெழுந் து கண்டா யந்தோ!

மணைபிரியா மணப்பெண்ணும் மாப்பிளையு மாய்நெடுநாள் மகிழ்ச்சி கூர
இணைபிரியா அன்னமுமன் றிலும்போல வாழ்ந்திருந்தோ மீறில் லாத
பிணைபிரியாத் திருக்கரத்தான் றாள்பிரியாப் பெருவாழ்வு பெற்று நின்றாய்
அணைபிரியாத் தெள்ளமுத வெள்ளமே! யினியுனைக்காண் பரிதே யந்தோ!

வள்ளென்று கணவர்கண்மேல் விழுமடவார் களை ஒருத்தி வைக்குமானே!
எள்ளென்று நான்சொலுமு னெண்ணிணையென்று செய்தேனே! யினிவந்
[துன்னைக்

கொள்ளென்று கொண்டெனக்குக் கொடுப்பாரு முளர்கொல்லோ? கோதா
[யுன்னைத்
தள்ளென்றுசொன்ன துண்டோ?கோபமிலாயென்னையோதணந்தாயந்தோ!

வேறுவகைச் சுவையகிலத் தில்லையெனக் கற்றறிந்த மேலோர் தேறி
ஆறுவகைச் சுவையேயென் றளவுபடுத் தினர்வள்ளி யம்மே! நீயோ
நூறுவகைச்சுவைக்கறிகளமுதெனக்கும்விருந் தினர்க்கும்நொடிக்குள்ளாக்கி
ஊறுவகைச் சுவைததும்ப வூட்டுவாய் துயரமுநீ யூட்டு வாயோ?

தெரிந்தனையே சிவசரித மனைத்தினையும் அறம்பலவுந் தேர்ந்து நாளும்
புரிந்தனையே யொருவேளை யுணவின்றி நானிருந்தாற் பொறாமற் றாய்போற்
பரிந்தனையே யொருநாளைப் பிரிவுபல நாட்பிரிவாய்ப் பகர்வாய் முற்றப்
பிரிந்தனையேஅகக்கண்ணாற்காண்பதன்றிக்காண்பதுண்டோபேசாயந்தோ!

கருகிவந்த விடம்பதிந்த கந்தரச்சுந் தரக்கடவுள் கழல்புக் காய்நம்
மருகிவந்தா ளெனமகிழ்ந்த நாகப்ப மாறனையும் மாறா இன்பம்
பருகிவந்த வேங்கடா சலபாண்டி யனையுந்தாள் பணிந்தாய் கொல்லோ?
உருகிவந்த பொற்கொடியே! யெனக்குவந்த குணவதியே! யுரைத்தி டாயே.

சைவந்தன் றுணையென்று நம்புமென்னைப் பெற்றெடுத்த தாயா ருன்னை
மெய்வந்த அன்புடனே மருமகள்வந் தாளென்ன மேனி யெல்லாந்
தைவந்து மிகமுகமன் சொலவவள்பா தம்வீழ்ந்து தாழ்ந்தா யோவென்
கைவந்த செழுங்கனியே! எனைத்தெய்வ மெனத்தொழுத கற்பின் வாழ்வே!

சாரங்கங் கதைசங்கஞ் சக்கரம்வா ளேந்துபரந் தாமன் கோயிற்
சீரங்கம் மாயூரந் திருப்பராய்த் துறைமுதலாய்ச் செழுங்கா வேரி
யோரங்க ளுள்ளபல தலந்துலா மதியாடி யுவந்து மீள்வோம்
தேரங்க மனையாயித் துலாமுதற்றெய் திக்கெங்கு சென்றா யந்தோ!

பாகன்ன மொழிபாகன் சிவநிசியைம் பதுவருடம் பரிந்து நோற்றாய்
கோகன்ன மிவ்வருடம் போய்வருவே மெனவுறுதி கூறி னாய்நீ
ஏகென்ன ஐம்பதுபொன் எடுத்துனக்குச் செலவுக்கென் றீந்தே னந்தோ!
நாகன்ன நடைத்திருவே! வருஞ்சிவராத் திரிக்கெங்கே நண்ணு வாயே.

சிறக்குநெடும் புகழ்மிகுத்த சீமுகவாண் டினில்வடக்குத் திக்கிற் றோன்றி
நிறக்குமெழு மலைமாய வனுக்குரிய புரட்டாசி நிறைமா சத்தில்
மறக்குநிலை வாராத இருபத்தெட் டினில்வெள்ளி மத்தி யானம்
துறக்கும்வள்ளி யம்மை!கயற் கண்ணம்மை மலர்க்கழலிற் சுகித்துள் ளாயே.

---

உ

# சரித்திர புராணங்கள்.

திருவாளர் க. இராஜமாணிக்கப் பிள்ளை யவர்கள்.

இரண்டுபேருடைய வாழ்வுதானும் ஒன்றுபோலில்லாத இவ்வுலகில் எல்லாருடைய வாழ்வும் ஒன்றுபோ லிருக்குமென் றெண்ணுவது சிறிதும் ஏலாது. அன்றியும் ஒருவனது வாழ்வின் நிகழ்ச்சிகளை யெல்லாம் ஒன்றும் விடாமல் மற்றவனுந் தன்வாழ்வில் அமைத்துக்கொள்ள இயலாதவனாகின்றான். அங்ஙனமாயின் ஒருவனது வாழ்வை மற்றவன் படிப்பதெற்றுக்கு?

ஒருவனது வாழ்வை அவனது இருப்பு (what he is), சொல் (what he says), செயல் (what he does) என மூன்றாகப் பிரிக்கலாம். அவனது இருப்பை உள்ளவாறறிவிப்பதே சரித்திரத்திற் கிலக்கணம். சரித்திரமோ சொல்லையும் செயலையும் வைத்தே எழுதப்படுகின்றது. அவ்விரண்டுமே இருப்பைக்காட்டும் வாயில்கள். ஆனால், அவன் தனதிருப்பை மறைத்துச் சிலபல சொல்லினுஞ் சொல்லலாம்; செய்யினும் செய்யலாம். அப்போது அவனிருப்பைக் காண்பதெப்படி? வாயிலொன்று மில்லை. இப்படித் தப்பாகவுஞ் செலுத்துகின்ற அவ்விரண்டையும் நேரான வாயில்கள் தாமென்று உறுதிப்படுத்துவது பொருந்துமா? ஆகவே, அவனதிருப்பை ஐயத்துக்கிடனின்றி விளக்காத சரித்திரத்தை மற்றவன் படிப்பதெற்றுக்கு?

ஒரே சரித்திரம் ஆசிரியன்மாரது பார்வை, ஆராய்ச்சி முதலிய வேறுபாட்டால் பலபட மாறுகின்றது. சென்னையில் நடந்த சம்பவம் மதுரைக்கு வருவதற்குள் எத்தனை பேதம்? நேற்று நடந்தவொன்று இன்றைப் பொழுதைக்குள் பலவித மாகவில்லையா? இப்படிக் காலத்தாலும் இடத்தாலும் உரைப்பவனாலும் விபரீதமுறும் ஒருவனது சரித்திரத்தை மற்றவன் படிப்பதெற்றுக்கு?

ஆனால், சரித்திரங்களைப் படிப்பதாற் பயனொன்றுமில்லையோ வெனிற் கூறுதும். எல்லா வுயிர்களும் விரும்புவது இறவாத இன்பம். சிவபிரான் அதனை அருளுமுன் அவைகளைப் பக்குவப்படுத்திக் கோடல்வேண்டும். அதற்காக அவர் பல விதிவிலக்குகளை ஏற்படுத்தியிருக்கின்றார். உயிர்கள் அவ்விதிகளைக் கொள்ளலும், விலக்குகளைத் தள்ளலுமே தாம் பக்குவமாதற்குரிய சாதனங்கள். சாத்தன் ஒருவிதியைத் தன்வாழ்வில் அமைத்து நடக்கின்றான். அதன்பயனாகிய இன்பமும் அவனுக்குச் சித்திக்கின்றது. கொற்றனது வாழ்வில் ஒரு விலக்கும் அதன்பயனாகிய துன்பமும் வந்துபடிகின்றன. முருகன் அவ்விதிவிலக்குகளைச் செவ்வனே யறிந்த மகாபண்டிதன். அவன் அவ் விருவரது சரித்திரங்களையும் எழுதும்போது சாத்தன் தழுவிய விதியையும் அடைந்த இன்பத்தையும், கொற்றனிடங் கண்ட விலக்கையும் துன்பத்தையும் அவனவனது வாழ்க்கைகளோடு சார்த்தி யெழுதிவிடுகிறான். ஒவ்வொருவனது வாழ்வும் அவனவனது சொந்தம். மற்றவன் அதனைத் தனதாக்கவே முடியாது. ஆனால், விதிவிலக்குகளும் பயன்களும் எல்லார்க்கும் பொது. அவைகளை ஒவ்வொருவனுந் தன்தன் வாழ்வில் அமைத்து நடத்தலாம். ஆகவே, சரித்திரங்கள் தம்மளவில் படிப்பார்க்குச்

சிறிதும் பயன் தருவதில்லை. அச் சுமைதாங்கிகள்மே லேற்றப்பட்ட விதிவிலக்குகளை யாவர்க்கும் பயன்படுவன. அவ்வளவே.

அம் முருகன் தானறிந்த விதிவிலக்குகளை யெல்லாம் ஒன்றும் விடாமல் சாமானிய மக்களும் எளிதில் விளங்கிக் கொள்ளுமாறு வெளிப்படுத்த விரும்புகிறான். இஃது அவனது உபகாரபுத்தி. ஒவ்வொரு விதியையும் விலக்கையும் வெளிப்படுத்த நிகழ்ச்சிகளையே தேடிப்பிடிப்பது அவனுக்குச் சாத்தியமா? அங்ஙனந் தேடுவதும் வீண்வேலையாகும். ஆகையால், அவன் தனக்குக் கிடைத்த நிகழ்ச்சிகளோடு தனது கருத்துக் கேற்பச் சில கற்பனைகளைச் சேர்த்துக் கொள்ளுவதும், அல்லது முழுக்கற்பனைகளையே யுண்டாக்கிக் கொள்ளுவதும் உண்டு. ஆகவே, நிகழ்ச்சி (History), நிகழ்ச்சி கலந்த கற்பனை (Historical Novel), கற்பனை (Novel) என்னும் மூன்றும் அவனுக்குச் சமமான அங்கீகாரம். எதன் மூலமும் அவன் தனதெண்ணத்தை வெளியிடலாம். எல்லார்க்கும் பொதுவாகிய ஒரு விதியைச் சாத்தன் தன் சொந்த வாழ்வி லமைப்பதற்கும், முருகன் ஒரு தலைவனைக் கற்பித்து அவன் வாழ்வி லமைப்பதற்கும் படிப்பவர் பார்வையில் வித்தியாசம் ஒன்று மில்லை.

இனிப், படிப்பார்க்குக் கற்பனையை விட நிகழ்ச்சியே மனவெழுச்சியை யதிக முண்டுபண்ணுமென்பதும் ஒரு பெருமயக்கம். நேரிற் காண்பார்க்குமட்டும் அது சிறிது எழுச்சியைத் தருதல் கூடும். ஆனால், சரித்திரமாக எழுதப்பட்டுப் புத்தகவுருவை யடைந்தபின்னர், அது பிறர் கைவழிச் சரக்குத் (Second hand information) தான். அது கற்பனையிலும் ஏற்றம் பெறுவதில்லை. அன்றியும் தேர்ந்த அறிஞர்கள் எழுதிய கற்பனைகளும், நடிக்கும் நாடகங்களும் இன்னும் உலகத்தை உத்ஸாஹப்படுத்திவருவது இன்றுங் கண்கூடு. கதாநாயகன் வாழ்வினும் சரித்திரவாசிரியன் கைவன்மையே படிப்பவர் மனவெழுச்சிக்குக் காரணமென்பது மற்றொரு சிறந்த வுண்மை.

ஆகவே, அறிஞர் நிகழ்ந்தது, நிகழவில்லை யென்ற காரணங்களால் மட்டும் சரித்திரங்களைக் கொள்ளவுந் தள்ளவுஞ் செய்யார். காலதேச வர்த்தமானங்கள் எந்த நிகழ்ச்சியையும் பேதப்படுத்தவே செய்யும். அப் பேதங்களை நிகழவொட்டாமல் தடுக்க மனிதனுக்கு வன்மையில்லை. யாதாயினும் ஒரு பேதத்தைத் தழுவித்தீர்வதே அவன் தலையெழுத்து. "ஏதி லாக் கற்ப மெண்ணில சென்றன, வாத லாலிக் கதையு மனந்தமாம்—பேத மாகு மப் பேதத்தி னுள்விரித்—தோது காந்தத்தி னுண்மையைக் கூறுகேன்" என்று கூறி ஸ்ரீ கச்சியப்பசிவமும் அவ் வெழுத்துக் கடங்கிற்று. பொய்யாமொழியாரும் இவ்வுண்மையை யறிந்தே சத்தியத்தை நிகழ்ந்தது கூறல், தீமையிலாதசொலல் என இருவகைப் படுத்தினர். முன்னையது தீமை பயக்குமாயின் அதனைப் பொய்யேயென்றொதுக்கவும், பின்னையது நிகழாததைப்பற்றியிருப்பினும் நன்மைபயக்குமாயின் அதனை மெய்யேயென்றேற்கவும் வேண்டும். இஃதவர் தந்த கட்டளை. ஆகவே நிகழ்ச்சியாயினும், பேதப்பட்டநிகழ்ச்சியாயினும், கற்பனையாயினும் தீமையிலாதவற்றை யறிவுறுக்குமதுவே சத்திய சம்பவமென்பது ஆன்றோர்க்கெல்லாம் ஒப்பமுடிந்தது.



நிற்க: வடமொழியிற் சரித்திர சமூகங்களாகப் பதினெட்டுப் புராணங்கள் உள்ளன. அச்சரிதங்களிற் பல பல்லூழிகாலத்துக்கு முன்னிகழ்ந்தன. பல்லாயிரமாண்டுகட்குப் பின்னிகழ்வன. மேல், கீழ், நடுவென்னுந் திரிலோக சம்பந்தமாவன. மக்கள், தேவர், அரக்கர், அசுரர் முதலிய பல சாதியார்களை அகப்படுத்திநிற்பன. மனிதன் பாவித்தற்கு எட்டாதன. கல்வெட்டு, காசு, பட்டயம் முதலிய ஆதாரங்களை அதிக்கிரமிப்பன. சமயிகளுக்கன்றி ஏனையோருக்குச் சதா தலையிடி தருவன. பூதபௌதிக முதலியசாத்திரங்கள் தம்மை யளக்கவரின் இடங்கொடாதன. இன்னும் பல அளப்பரிய அருமைபெருமைகளை யுடையன.

பலபெரியார் பலபுராணங்களைத் தமிழிற் பெயர்த்து உபகரித்தனர். சைவத்தின் சிறப்பும் தமிழின் செம்மையும் அவற்றிற் பகிரங்கம். அப்பெயர்ப்புநூல்கள் தவிர சங்கவிலக்கியமுதல் ஏறக்குறைய எல்லாச் செந்தமிழ்நூல்களிலும் புராணக்கதைகள் வெகு ப்ரசித்தம். பன்னிருதிருமுறைகளிலும் பெய்யப்பட்டிருக்கும் புராணக் கதைகளுக்குக் கணக்கேது? சீவகசிந்தாமணிமுதலிய புறமதநூல்களிலும் அக்கதைகள் பெய்யப்பட்டுள்ளன. நீதிகளையே அதிகமாக வெடுத்து விளக்கிப்போந்த திருக்குறளும் 'இந்திரனே சாலுங் கரி' யென்றது. இவையெல்லாம் புராணவந்தனைகள். வேதவிதிவிலக்குகளைப் புராணங்கள் சரித்திரங்களிற் சார்த்திச் சாமானியருமறியுமாறு காட்டுகின்றன. ஆகலின், தீமையிலாத சொலல் என்னும் ஏதுவொன்றினைவைத்தே அப் பெரியாரெல்லாம் புராணங்களை யங்கீகரித்தனர். நிகழ்ந்தது கூறல் என்னும் மற்றோர் ஏது தமக்கும் பிறர்க்கும் பயன்படாமையைப் பெரிது முணர்ந்த அவர்கள் அதனை யறவே யொதுக்கினர். ஆனால், இக்காலத்தாரிற் பலர் அவ்வொதுக்கப்பட்ட ஏதுவையே மதித்து அடிக்கடி சருக்கிக் குறிக்கோளறியாதல்லற்படுகின்றனர். பாவம்! இனியாயினும் அவர் இவ்வேதுவைத் தள்ளித் தீமையிலாதசொலல் என்பதையே பற்றிப் புராணங்களையெல்லாம் முன்னோர்போற் போற்றி யுய்வாராக.

---

தாளாண்மை யில்லாதார் வேளாண்மை செலுத்துவதுந்
　　தரைமே லென்றும்
வேளாண்மை யில்லாதார் மனைவாழ்க்கை செலுத்துவதும்
　　விசயம் வேட்டு
வாளாண்மை யில்லாதார் மண்டுசமர்க் கேறுவதும்
　　வளர்பு ராணம்
கேளாதார் கதிவிழைவும் விழியில்லார் வழிநடக்குங்
　　கிரம மாமால்.

(திருக்குற்றாலப் புராணம்)

---

உ

# சிவோத்கர்ஷம். *

பொன்னேரி பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள்.

(ஸ்ரீ கிருஷ்ணபகவானது பிரசங்க வர்ஷம்.)

*கிருஷ்ணபகவான் ஆசமனஞ்செய்து பரிசுத்தராயிருந்துகொண்டு சங்கரருடைய குணங்களைச் சொல்லலானார்:—*

*"பிராம்மண சிரேஷ்டர்களே! நீங்களும், ஐயா! யுதிஷ்டிரரே! நீரும், பீஷ்மரே! நீரும், ஜகத் பிரபுவான சங்கரருடைய நாமங்களைக் கேளுங்கள். முன்னே நான் யோகசக்தியினால் சிவபெருமானை நிஜரூபத்துடன் கண்டேன். ஜாம்பவதியானவள் புத்ரனை விரும்பினவளாய் என்னிடம் வந்து 'அச்சுதரே! ஒருபுத்ரனை எனக்கு விரைவிற் கொடுக்கக்கடவீர். நீர் பன்னிரண்டு வருஷங்கள் நோன்பெடுத்து உடம்பை உலர்த்திப் பசுபதியை ஆராதித்து ருக்மிணியினிடம் புத்ரர்களைப் பெற்றீர். சிறந்த பராக்ரமசாலிகளான புத்ரர்களை ருக்மிணியினிடம் உண்டாக்கினது போல எனக்கும் புத்ரனைக் கொடும்' என்று கேட்டாள். நான், 'அரசியே! எனக்கு விடைகொடு. நீ சொன்னதைச் செய்யப்போகிறேன்' என்று சொன்னேன். அவளும் என்னைப்பார்த்து, 'யாதவரே! க்ஷேமமுண்டாகவும் ஜயமுண்டாகவும் செல்லக்கடவீர்' என்றுசொன்னாள். ஜாம்பவதியினால் இவ்வாறு மங்களாசாஸனம் செய்யப்பெற்ற நான் பெரியோரிடம் செலவு பெற்றுக்கொண்டபிறகு கருடனை நினைத்தேன். கருடன் என்னைத் தூக்கிக்கொண்டு சென்றான். இமயமலையைச் சார்ந்து கருடனை அனுப்பிவிட்டேன். அந்த இமயமலையில் வ்யாக்ரபாத புத்ரரும் மஹாத்மாவுமான உபமன்யு மஹரிஷியின் திவ்யாச்ரமத்தைக் கண்டேன். அந்த ஆச்ரமத்தில் பிரவேசிக்கும்போதே ஜடையும் மரவுரியும் தரித்தவரும் மகிமை பொருந்தியவரும் ஒளியினாலும் தவத்தினாலும் அக்நியைப்போல ஜ்வலிப்பவரும் சிஷ்யர்களால் அனுஸரிக்கப் பெற்றவரும் மனத்தை யடக்கினவரும் இளமைப் பருவத்திலிருப்பவருமாகிய ஒரு ப்ராம்மண சிரேஷ்டரைக் கண்டேன். அந்த உபமன்யுவென்னும் முனிவர், தலைவணங்கி வந்தனஞ்செய்த என்னைப் பார்த்து மிக்க அழகான இன் சொல்லினால் பேசலானார். 'கிருஷ்ணா! உம்மைப் போன்ற புத்ரனை நீர் அடைவது திண்ணம். மிகப்பெருந்தவம் செய்து லோக நாதரான சிவபெருமானை ஆராதனம் செய்யும். விஷ்ணுவே! மஹாதேவர் உமாதேவியுடன் இங்கே விளையாடுகிறார். ஜனார்த்தனரே! ஐயா! கேசவரே! ரிஷபக்கொடியுடைய சிவபெருமானால் முன்னர் உண்டாக்கப்*

** இது, கும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் ஸம்ஸ்கிருத பண்டிதர் மஹா வித்வான் சதாவதானம் ஸ்ரீ உபய - வே. தி. ஈ. ஸ்ரீநிவாஸாசாரியர் தமிழில் மொழிபெயர்த்துக் கும்பகோணம் காலேஜ் ரிடயர்ட் தமிழ்ப் பண்டிதர் ம. வீ. இராமாநுஜாசாரியர் திருவல்லிக்கேணி கம்மர்ஷியல் பிரஸில் 1923-ல் பதிப்பித்த வியாசபாரதம் அநுசாஸன பர்வம் 45—46 வது அத்தியாயங்களிலிருந்து திரட்டப்பட்டது.*



*பட்டதும் அக்னியைப் போன்றதுமான சக்ராயுதம் அந்தப்பகவானால் உமக்களிக்கப்பட்டதன்றோ? அந்தச்சக்கரம் ஸுதர்சனமென்று பெயருள்ளதாயிருக்கட்டுமென்று ஆதியிலேயே சங்கரரால் சொல்லப்பட்டது. வாலகில்யர்மேல் மகாதேவர் கிருபைவைத்து, 'அமிருதத்தைக் கொண்டுவரும் கருடனை உங்கள் தவத்தினால் உண்டாக்குவீர்கள்' என்று சொன்னார். ஐயா! மாதவரே! நானும் முன்னே தேவர்க்குந் தேவரான பசுபதியை நேராகக் கண்டேன். அதையும் கேளும். மகேசுவரரிடமிருந்து யான் அடைந்தவற்றை யெல்லாம் முழுதும் உமக்குச் சொல்வேன். ஐயா! கிருதயுகத்தில் வியாக்ரபாதரென்னும் ரிஷிஒருவர் இருந்தார். நான் அவருடைய குமாரன். மாதவரே! பிறந்து சிலகாலத்துக்கெல்லாம் ஆத்ம ஜ்ஞானமுள்ள முனிவர்களின் ஆச்சிரமத்திற்குச்சென்றேன்; அவ்விடத்தில் கறக்கப்படும் பசுமாட்டையும் ருசியில் அமிருதத்திற்கொப்பான அதன்பாலையும் கண்டேன். மதுஸூதனரே! அதுமுதல் என் மாதாவிடம் 'தாயே! எனக்குப் பால்கொடு, பால்கொடு' என்றழுதேன். என் அன்னை பாலில்லாமையால் மாவைத் தண்ணீரில் கரைத்துக் கொடுத்தாள். அப்போது குழந்தையாயிருந்ததனால் என்தாயைப் பார்த்து, 'தாயே! நீ எனக்குக்கொடுத்தது பால் சேர்ந்த ஆகாரமன்றே?' என்று கேட்டேன். மாதவரே அதன் பிறகு, என் தாய் துக்கத்தினால் கண்ணீர் விட்டுப் பிள்ளையினிடமுள்ள அன்பினால் தழுவி உச்சிமோந்து, 'குழந்தாய்! முனிவர்களுக்குப் பாலன்னம் ஏது? நமக்குச் சிவபெருமானே முக்கியமான ஆதரவு. குழந்தாய்! முக்கண்ணரும் வரங்களைக் கொடுப்பவரும் அழிவற்றவருமான சிவபிரானை யாராதியாமல் பாலன்னமும் ஸுகங்களும் ஆடைகளும் எப்படிக் கிடைக்கும்? குழந்தாய்! முழுக்கருத்துடன் அந்தச்சங்கரரைச் சரணமடை. அன்புள்ள மைந்தனே! அவரனுக்கிரகத்தினால் நீ விரும்பினதற்கு மேலான பலன்களைப் பெறுவாய்' என்று சொன்னாள்.*

*இவ்வாறு தாய் சொல்லியதைக் கேட்டு நான் தேவவருஷத்தில் ஆயிர வருஷகாலம் இடக்கால் கட்டைவிரல் நுனியை யூன்றி நின்றுகொண்டு தவம்செய்து சங்கரரைச் சந்தோஷிக்கச் செய்தேன். அதன்பிறகு, எல்லா லோகங்களுக்கும் ஈசுவரரும் ஸர்வசக்தருமான மஹாதேவர் என்னை உறுதியான பக்தியுள்ளவனென்று அறிந்து என்மேலன்புடன் பரீக்ஷைசெய்யத் தொடங்கினார். பெரும் புகழுள்ள அந்தச் சங்கரர் இந்திரன் வடிவமெடுத்து வந்தார். அவ் விந்திரன் என்னைப் பார்த்து, 'பிராம்மணோத்தமனே' நான் உன்னிடம் அன்புகூர்ந்திருக்கிறேன். நீ மனத்திற் கருதுகிற வரத்தை என்னிடம் கேள்' என்று சொன்னான். கிருஷ்ணா! நான் அப்போது இந்திரனைப் பார்த்து, 'ஓ ப்ரஸன்னனே! மஹாதேவர் ஒருவரைத் தவிர வேறு எந்தத் தேவதையிடத்திலும் வரம் கேட்கவில்லை. இஃது உண்மை. நமது இந்தச்சொல் மிக்க உறுதியானது. மகேசுவரரைத் தவிர மற்றவர்களைப் பற்றிய பிரஸ்தாபமே எனக்கு ருசிக்கவில்லை. பசுபதியின் சொல்லினால் உடனே நான் புழுவும் பல கிளைகளோடுகூடிய மரமுமாவேன். பசுபதியல்லாதவர்களுடைய அனுக்கிரகத்தினால் வரும் திரிலோகாதிபத்யம் என்னும் ஐசுவர்யமும் நான் விரும்பவில்லை. சிவனது பாதங்களை வந்தனம் செய்வதில் ஆசையோடு சண்டாளன் நடுவில் பிறப்பதும் எனக்கு இருக்கலாம்; ஈசுவரரிடத்தில் பத்தியில்லாமல் இந்திரன் வீட்டில் பிறப்ப*

தும் வேண்டாம். சிவபக்தியென்னும் ரஸாயனத்தைக் குடித்தபிறகு ஸம்ஸாரபய முண்டாவதில்லை. சிவனது அனுக்ரகம் பெறாதவனுக்கு ஒரு நொடிகூடச் சிவனிடத்தில் பக்தியுண்டாவதில்லை. இந்திரனே! மகேசுவரர் கட்டளையின்றித் தேவலோகாதிபத்யமும் எனக்கு வேண்டாம். ஸ்வர்க்கவாஸத்தையும், தேவேந்திர பதத்தையும், பிரம்ம லோகத்தையும், மோக்ஷத்தையும், மற்றுமுள்ள எந்தப் பலன்களையும் நான் கேட்கவில்லை; சிவனுக்குத் தாஸனாயிருப்பதை மட்டுமே கேட்கிறேன். ஈசுவரர் எனக்கருள்செய்யும் வரையில் தேகத்திலுள்ள துக்கங்களை நான் வகிக்கிறேன். ருத்ரரது அருளைப் பெறாமல் எவனுக்குச் சாந்தியுண்டாகும்? கெட்ட மார்க்கத்திற் போவதை விடுவிப்பவராகிய ருத்ரர் எவர்களின் உள்ளங்களில் இருக்கவில்லையோ, சீ! சீ! அவர்கள் நிந்திக்கத்தக்கவர்கள்; நிந்திக்கத்தக்கவர்கள்; பின்னும் நிந்திக்கத்தக்கவர்கள். சீ! எனது பாவங்களினால் மறுபடியும் ஜன்மமுண்டாகுமாயின் அந்த அந்த ஜன்மங்களிலும் எனக்கு அழியாத சிவபக்தியுண்டாகவேண்டும். இவ்வுலகம் படைத்தவர் ப்ரம்மதேவரென்று சொல்லுகின்றனர். அவரும் தேவசிரேஷ்டரான பரமசிவனை ஆராதித்துத்தான் பெரிய ஐசுவரியத்தை அனுபவிக்கிறார். பிரம்ம விஷ்ணுக்கள் முதலானவர்களின் உயர்ந்த ஐசுவரியமும் பகவானான பரமசிவனிடத்தி லிருக்கிறது. இந்திரனே! உன்னுடைய ஐசுவரியமெல்லாம் தேவர்க்குந் தேவரான ஈசுவரருடைய அனுக்கிரகத்தினாலேதான். வேறு ஈசுவர ரூபத்தைத் தேவர்கள் காண்பாராயின் அவர்கள் அஸுரர்களால் நசுக்கப்படும்போதும் ஏன் அதைச் சரணமடையவில்லை? சிவனைத் தவிர வேறு யாருடைய ரேதஸினால் பொன்மலை செய்யப்பட்டது? ஓ! இந்திரனே! தேவர்க்குந் தேவரும் கர்த்தாவுமாகிய ருத்ரரால் இவ் வுலகத்தில் பகத்தின் அடையாளத்தோடுகூடிய லிங்கம் உண்டாக்கப்பட்டிருப்பதை நீ ப்ரத்யக்ஷமாகக் காணலாம். ஈசுவரர் காரணங்களுக்குங் காரணமென்பதற்கு வேறு நியாயங்களால் ஆவதென்ன? மற்றொருவனுடைய லிங்கத்தைத் தேவர்கள் அர்ச்சித்ததாக நாம் கேட்கவில்லையன்றோ? மகேசுவரரை விட வேறு யாருடைய லிங்கமானது எல்லாத் தேவர்களாலும் இப்போதாவது முன்னேயாவது பூஜிக்கப்பட்டிருக்கிறது? உனக்குக் கேள்வியிருந்தால் சொல். ப்ரம்மாவும் விஷ்ணுவும் நீயும் தேவர்களும் யாருடைய லிங்கத்தை எப்போதும் பூஜிக்கிறீரோ அவர் அந்தக் காரணத்தினாலேயே மிகச் சிறந்தவரல்லரோ? தாமரைமலரையாவது சக்கரத்தையாவது வச்சிராயுதத்தையாவது அடையாளமாகக்கொண்டு பிரஜைகள் பிறப்பதில்லை; லிங்கத்தையும் பகத்தையும் அடையாளமாகவுடையவைகளாகப் பிறக்கின்றன. ஆதலால், பிரஜைகள் ஈசுவரருடையவை. பெண்களெல்லாரும் உமாதேவியின் காரணரூபத்திலிருந்து உண்டாக்கப்பட்டதனால் பகம் அடையாளமாகப் பிறந்திருக்கின்றனர். புருஷர்களனைவரும் சிவனுடைய லிங்கத்தினால் அடையாளம் செய்யப்பட்டிருப்பது பிரத்தியக்ஷமாயிருக்கிறது. சராசரங்களடங்கிய இம் மூவுலகங்களிலும் ஈசுவரரை விட வேறு காரணம் உளதென்றும் தேவியின் அடையாளம் இல்லையென்றும் சொல்லும் கெடுமதியுள்ள மனிதன் நாஸ்திகனாவான். இந்திரனே! நான் வேண்டுகிற பலனையும் மரணத்தையும் அவரிடத்திலிருந்தே விரும்புகிறேன். நான் விரும்பின பலன்களெல்லாவற்றையும் கொடுப்பதாயினும் மற்றொரு தேவதையை நான் வேண்டுவதில்லை' என்று நான் சொன்னேன். ஒரு நிமிஷத்துக்குள் அந்த ஐரா



வதமே ரிஷபமாக இருந்ததைக் கண்டேன். தேவர்க்குந் தேவரான மஹாதேவர் உமாதேவியுடன்கூட அதன்மேலேறிக்கொண்டு விளங்கினார். ப்ரம்மதேவர் ஈசுவரருடைய வலப்பக்கத்திலிருந்தார். நாராயணரும் அவரது இடப்புறத்தி லிருந்தார். பிரம்மதேவர் மஹாலிங்கத்தையும் சிவனையும் கண்டு ரதந்தரமென்னும் ஸாமத்தைச் சொல்லி ஸ்தோத்திரம் செய்தார். நாராயணர் ஜ்யேஷ்ட ஸாமம் என்னும் ஸாமத்தைச்சொல்லிச் சிவபெருமானைப் பாடினார். இந்திரன் சதருத்ரியம் என்னும் உத்தமமான வேதத்தைச் சொல்லிப் பரப்பிரம்மத்தைத் துதித்தான். அதன்பிறகு நான் பகவானைத் துதிக்கலானேன்.

மஹாதேவராகிய உமக்கு நமஸ்காரம். வெண்ணீறணிந்தவரும் தாமே தமக்கிலக்கணமா யிருப்பவருமான உமக்கு நமஸ்காரம். முடிவற்றவரும் மங்களகாருமான உமக்கு நமஸ்காரம். ஸாங்கியராகவும் யோகியாகவுமிருப்பவருமான உமக்கு நமஸ்காரம். பிரம்மதேவரின் சிரத்தை அறுத்தவருக்கும் சிந்தைக் கெட்டாதவராகிய மாயாவிக்கும் நமஸ்காரம். நீர் வேதங்களில் ஸாமவேதம். வர்ணங்களில் பிராம்மண வர்ணம். பகவானே! சக்தியில்லாத எனக்குத் தஞ்சமாகக் கடவீர். நீர் உமது ரூபத்தை மாற்றி என்னை மயங்கவைத்தீர். அதனாலே நான் உமக்கு அர்க்கிய பாத்யங்களையும் ஸமர்ப்பிக்கவில்லை என்றேன். கிருஷ்ணா! சங்கரர் என்னைப்பார்த்து 'குழந்தாய்! உபமந்யுவே! உன் பக்தியினால் நான் மிக்க சந்தோஷமுள்ளவனாயிருக்கிறேன்' என்று சொன்னார். நான் தழுதழுத்த குரலோடு 'ஸ்வாமி! இப்போதுதான் யான் பிறந்தேன். என் ஜன்மம் இப்போது பயன்பெற்றது. உற்பத்தியும் நாசமும் இல்லாத நித்யமும் ஞானரூபமுமான பரதத்வத்தை மிகப்பிரஸித்தமான இவ்வுருவமுள்ளதாகத்தான் வித்வான்கள் தியானம் செய்கின்றனர். உலகங்களைப் படைக்கும் ப்ரம்மதேவரை வலப்பக்கத்திலிருந்தும், உலகங்களைக் காப்பவராகிய விஷ்ணுவை இடப்பக்கத்திலிருந்தும் இந்த ஈஸ்வரர் படைத்தார். பிரபுவான ஈஸ்வரர் பிரளயகாலம் வந்தபோது ருத்ரரைப் படைத்தார். பிரபுவே! எனக்கு உம்மிடத்தில் எப்போதும் பக்தியிருக்கவேண்டும். எப்போதும் குறையில்லாமல் பாலன்னம் புசிக்கக்கடவேன்' என்று சொன்னேன். சிவபெருமான் என்னைப் பார்த்துப் பின்வருமாறு பேசலானார். 'நீ ஜரையும் மரணமுமில்லாமல் திவ்யஜ்ஞானமுள்ளவனா யிருக்கக்கடவாய். உனக்கு யௌவனமும் தேஜஸும் உண்டாகக் கடவன. நீ விரும்பின இடமெல்லாம் உனக்குத் திருப்பாற்கடல் வந்துசேரும். அமிருதத்தோடு கூடிய பாலன்னத்தை ஒருகல்பகாலம் புசிப்பாய்.' ஈஸ்வரர் இவ்வாறு சொல்லி வரங்களையளித்து அந்தர்த்தானமானார். இவ்வாறு அந்த உபமன்யுமுனிவர் சொன்னதைக்கேட்டு நான் அம்மஹா முனிவரைப்பார்த்து, 'ப்ராம்மணஸ்ரேஷ்டரே! சங்கரர் உமக்குத்தரிசனங் கொடுத்ததுபோல எனக்குங்கொடுப்பாரா? உமக்கு அனுக்கிரகம் செய்ததுபோல எனக்கும் செய்வாரா?' என்று கேட்டேன். உபமந்யுமுனிவர் 'தாமரைக்கண்ணரே! சீக்கிரம் மஹாதேவரை நீரும் காணுவீர்; சந்தேகமில்லை. உமாதேவியோடு கூடிய மகேஸ்வரரிடத்திலிருந்து இருபத்துநான்கு வரங்களை நீர் பெறப்போகிறீர். ஜபிக்கத்தகுந்த ஒரு மந்திரத்தை உமக்கு உபதேசிப்பேன். அதனால், நீர் சங்கரரைப் பார்ப்பீர்' என்று சொன்னார். நான் 'ஓ! மஹாமுனிவரே! அவரை

186932

உமது அநுக்கிரகத்தினால் நான் பார்க்கக் கடவேன்' என்றுகேட்டேன். பாரதரே! இப்படி மஹாதேவரைப் பற்றிய கதையை அவர் எனக்குச் சொல்லிக்கொண்டிருக்கும்போதே எட்டுத்தினங்கள் ஒரு முகூர்த்தம்போலச் சென்றன. எட்டாவதுநாள் அந்தப் பிராம்மணரால் சாஸ்திரப்படி நான் தீக்ஷை செய்விக்கப்பட்டேன். மரவுரியுடுத்து மேகலை கட்டிக்கொண்டேன்; முதல்மாதம் கனிகளைப் புசித்தேன்; இரண்டாவது மாதம் ஜலபானம்செய்தேன்; மூன்று நாலு ஐந்தாவது மாதங்களில் வாயுபக்ஷணம் செய்துகொண்டு கைகளை மேலே தூக்கி ஒற்றைக் காலால் தளராமல் நின்றேன். பாரதரே! பாண்டு புத்ரரே! ஓர் ஒளியைக் கண்டேன். அதில் பகவானானவர் தம் பாரியையாகிய உமாதேவியுடன் இருந்தார். குந்தி புத்ரரே! நான் மயிர் பொடித்து ஆச்சர்யத்தினால் மலர்ந்த கண்களுடையவனாய் அந்தப்பரமசிவனைக் கண்டேன். அப்போது மகாதேவரைக் கண்ணெடுத்துப் பார்க்க எனக்குமுடியாமற் போயிற்று. பிறகு ஈஸ்வரர் என்னைப் பார்த்து, 'கிருஷ்ணா! பாரும்; பேசும். உம்மால் நான் நூறு தடவைகளும் ஆயிரந் தடவைகளும் ஆராதிக்கப்பெற்றிருக்கிறேன். உம்மைப்போல எனக் கன்பர் மூவுலகங்களிலுமில்லை' என்று சொன்னார். ஈசுவரரை நான் தலைவணங்கி வந்தனம் செய்தபிறகு உமாதேவியும் அன்புகூர்ந்தாள். பரமசிவனைப் பார்த்து நான் சொல்லலானேன்:—

'என்று மிருப்பவரே! எல்லாவற்றிற்கும் காரணரே! உமக்கு நமஸ்காரம். நீரே பிரபு; இம் மூவுலகங்களும் உம்மால் படைக்கப்பட்டவை. நீர் புலப்படாதவர்; நினைவுக்கும் எட்டாதவர்; பரிசுத்தர்; பொன்மயமாயிருப்பவர்; பரமாத்மா; பிராம்மணன் வேதத்தினால் உம்மை யறிந்து மயக்கந் தெளிகிறான். நீர் க்ஷேத்ரஜ்ஞரென்று ரிஷிகளால் துதிக்கப்படுகிறீர். ரிஷிகள் உம்மையே தியானிக்கின்றனர். ஏழு ஸூக்ஷ்மங்களையும் ஆறு அங்கங்களையுமுடைய உம்முடைய வடிவத்தைக் கண்டு ப்ரகிருதிக்கு வேறாக ஆத்மாவைப் பிரித்து அறிவதாகிய யோகத்தி லிருக்கும் வித்வான் உம்மையே அடைகிறான்' என்றேன். குந்திபுத்ரரே! இவ்வாறு என்னால் துதிக்கப்பட்டபோது தாமாகவே எனக்குச் சொல்லலானார்.— 'கிருஷ்ணா! எம்மிடத்தில் உமக்குச் சிறந்த பக்தியிருப்பதை யாமறிவோம். வரங்களை நீர் கேட்கலாம். உமக்கு அவற்றைக் கொடுத்தேன்'. (நான்) அந்தப் பகவானை மிகுந்த ஸந்தோஷத்தோடும் அடக்கத்தோடும் தலைவணங்கி நமஸ்காரம் செய்தபிறகு, 'பதினாயிரம் புத்ரர்களை வேண்டுகிறேன்' என்று சொன்னேன். சங்கரர் 'அவ்வாறே ஆகட்டும்' என்று சொன்னார். பிறகு உமாதேவி அருள்கூர்ந்து என்னைப் பார்த்து 'உமக்கு ஸாம்பன் என்னும் புத்ரன் பகவானால் கொடுக்கப்பட்டான்' என்று சொன்னாள். பாரதரே! பீமனுக்கு மூத்தவரே! ஈஸ்வரரும் ஈஸ்வரியும் எனக்கு இவ்வாறு வரங்களையளித்த பிறகு கணங்களுடன் மறைந்தனர். ராஜசிரேஷ்டரே! இந்தமிக்க ஆச்சர்யமான விஷயத்தை யெல்லாம் அதிக மகிமையுள்ளவரான உபமன்யுவென்னும் பிராம்மணருக்கு முன்னர் நான் சொன்னேன். அந்தப்பிராம்மணர் தேவருக்குந் தேவரான சங்கரருக்கு நமஸ்காரம் செய்து, சிவனுக்கு ஒப்பான தேவதையில்லை. சிவனுக்குச் சமமான தஞ்சமில்லை. கொடுப்பதில் சிவனைப்போன்றவரில்லை. யுத்தத்தில் சிவனுக்கொப்பானவரில்லை' என்று சொன்னார்.

———

௨

# அப்பைய தீக்ஷதர் மகிமை.

———

திருவல்லிக்கேணி நல். கண்ணப்பமுதலியார் அவர்கள்.

காஞ்சீபுரத்திலே தாத்தாசாரியென்னும் பாஞ்சராத்திரி ஸ்ரீமத் அப்பைய தீக்ஷத ஸ்வாமிகள் விஷயத்தி லசூசை யதிகரித்து அவரை யெந்த விதத்தில் வெல்வதென்று ஆலோசித்து அவர்பாற் சென்று, 'உம்முடைய சிவன் விடமுண்டருளியது சத்தியமாயின் யாங்கடரு மிவ் விடத்தை யுண்டு சுகித்திரும் பார்ப்போம்' என்று கூறுதலும், தீக்ஷதஸ்வாமிக ளிசைந்து அவ் விடங்கலந்த பாலையுண்டு ஒருசிறிதும் வருந்தாது சிவதத்வவிவேகம் என்னுங் கிரந்தமொன் றப்போதே யியற்றி சர்வஜனப் பிரசித்தியாய், அரசன் முதலியவர்க ளஞ்சும்படி பிரசங்கித்தனரென்றும், அதனை மறுத்துக் கூற வகையில்லாமல் பேய்போல் விழிக்குந் தாத்தாசாரியனுடைய தீய செய்கையையும் விசார லோபத்தையும் அறிந்த அரசவள்ளல் சிவஞானச் செல்வராகிய தீக்ஷதசுவாமிகளை யடைந்து ஆசாரிய மரியாதைகொண்டு தன்னுடைய தவம் பலித்துக் கைவந்ததுபோலும் மகிழ்ந்து பேரன்புடையவனாய் ஒழுகிவருங் காலத்தில், தாத்தாச்சாரி அதிக மாச்சரியங்கொண்டு என்னுடைய சீடனாகிய நீ என் விரோதியை யபிமானிப்பது தகாதெனக் கூறி தீக்ஷதரோடு வாதித்து அவர் செய்த கிரந்தங்களையெல்லாங் கண்டித்து வைஷ்ணவ ஜயஸ்தம்பம் நாட்டப் போகின்றேன். இப் பெரு விஷயத்தை நீ முன்னின்று முடிக்கவேண்டு மென்றனர்.

அரசன் உளம் புழுங்கித் தீக்ஷதஸ்வாமிகள் விஷயத்தில் அவ்வாறு நடத்தத் தனக் கிசைவில்லையாயினும், தாத்தாசாரி தன்னுடைய ஆசாரியனென்னும் விசுவாசம் பாராட்டி அவனை மறுக்கக் கூடாதவனாய், தீக்ஷத ஸ்வாமிகளை யடைந்து வந்தனம்புரிந்து விஷயம் இன்னதென் றறிவிக்கவும், சுவாமிகள் சந்தோஷித்து அரசனை நோக்கி இந்த வாத முடிவில் தோல்வி வெற்றிகளை நிச்சயித்துக் கூறுவதற்கு மத்தியஸ்தர் வேண்டுமாகையால் யாரையாவது சித்தப்படுத்துமென்று திருவுளம்பற்றுதலும், அரசன் வியாசபட்டர், பராசரபட்டர் என்னும் பெயர் வகித்த மத்துவாசாரியர்களையும் இன்னுமனேக மதவாதிகளையும் வரவழைத்து அவர்களில் மத்துவாசாரியர்களாகிய இருவரையும் மத்தியஸ்தராக நியமித்து வாதாரம்பமாகி நடந்துவருகையில் தாத்தாசாரி பின்னிடைந்து கட்சிகள் சொல்ல வகையறியாமல் குதர்க்கவாதஞ் செய்யத் தொடங்கினர்.

மத்தியஸ்தர்களாய் நின்றவர்களில், வியாசபட்ட ரென்பவர் எழுந்துநின்று தீக்ஷித ஸ்வாமிகளை நமஸ்கரித்து பிரசங்கித்து அஞ்சலியத்தராய் நிற்கையில், பராசரபட்டர் என்பவர் கொஞ்சம் வருந்தி மத்தியஸ்தமாக வந்த நம்மில் வியாசபட்டர் சைவராய்விட்டனரேயென்று சகிக்கமாட்டாமல் தாமெழுந்து தீக்ஷிதரோடு அநேகவிதமாய் வாதிக்கத் தொடங்கி எழுநாள்பரியந்தம் வாதித்துந் தீக்ஷிதர் பின்வாங்காமல் வாதித்துவருந் தீரத்தையும் அத் தெய்வசபையில் விளங்கிவரு முண்மையையுங் கண்டு பரிபாக விசேஷத்தால் தீக்ஷிதர்பால் தமக்கும் பக்தி ஜநித்து அவரை நமஸ்கரித்துக்கொண்டு அபசாரக்ஷமை வேண்டிநிற்கையில், தீக்ஷிதரவர்கள் எழுந்துநின்று அநேக மதவாதிகள் நிறைந்திருக்கும் அச் சபையை நோக்கி இப்போது நாம் செய்துவரும் சைவப் பிரசாரத்தை மத்துவ ராமாநுஜ மதஸ்தர்கள் மறுத்து எம்மால் கண்டிக்கப்பட்டார்களானபடியால் இந்தச் சபையில் வேறு எந்த மதஸ்தர்களாவது எம்மை மறுக்கக் கூடுமாயின் அவ்வாறு செய்யலாமென்று திருவுளம் பற்றினார்கள்.

வரநந்தி யென்னும் பௌத்தனொருவ னெழுந்து பிடகாகம வழித்தாய் சில பொய்யுரைகளைப் பிதற்றி யுடனே கண்டிக்கப்படவும், மாயாவாதிகளாகிய சில மதஸ்தர்கள் அவரை யணுகி, தேவரீர் வைதிக நூல்வியராயிருந்தும் அதனை யிங்கே விளக்கி அத்வைத ஸ்தாபனஞ் செய்யாமல் வேதபாஹ்யமாகிய சிவாகம வழித்தாய சைவப் பிரசாரஞ் செய்வது யுக்தமன்றென்று கூறிய காலத்தில், அவர்களை நோக்கி வேதசிவாகமங்க ளிரண்டும் பதியாகிய சிவபிரானருளிய உண்மைப் பிரமாணங்களாகவும், நீங்கள் சிவாகமங்களை நிந்தித்து வேதவிருத்தமான துராசாரம் பூண்டு தீய வொழுக்கத்தில் நிற்கும் பாஷண்டிக ளாவீரென்று அவர்களைக் கண்டித்து, வைதிகசார நிர்ணயம் என்னுங் கிரந்தமொன்று அப்போதே யியற்றி வேதசிவாகம சம்மதமான தருமங்களைக் கூறிச் சித்தாந்தப்படுத்திவிட்டு மேல் ஒருவருந் தம்மை வாதிக்க இடமில்லாமல் எல்லா மதங்களையும் கண்டித்து "பரமத திமிரபாநு" என்னுங் கிரந்தமொன்றியற்றி சைவத்தி னுண்மையை அநேகவிதங்களால் எடுத்துக்கூறிப் பிரசங்கிக்கவும், இவ் வற்புதங்களையெல்லாங் கண்டுகொண்டு நிற்பவராகிய பராசர பட்டர் தீக்ஷித ஸ்வாமிகளை வலம்வந்து அவரை நமஸ்கரித்துக்கொண்டு அரசன் முதலிய மகாஜனங்கள் கூடிய அப்பெருஞ் சபையைப் பார்த்து மாத்துவமதமாகிய கடாந்தகாரந் தொலைய உதிக்கும் ஞானசூரியனென்றும், பௌத்தசித்தாந்தமாகிய மஹாரணியத்தைத் தகிக்கவரும் ஜ்வாலாக்கினியென்றும், சிவாகமங்களை வேதவிருத்தமென்று கூறித் திரியும் பாஷண்டிகளாகிய சர்ப்பசமூகங்கள் நசிக்க வெழுந்த கருடபகவானென்றும், இராமாநுஜமதமென்னும் பர்வதம்பொடிந்துபோகப் பேதித்துடைக்கும் வச்சிராயுதமென்றும், சைவாசாரமென்னுஞ் சமுத்திரத்தினின்றுந்



தோன்றிய பூரணசந்திரன் என்றும், மஹா வித்வசிரோமணியாகிய அப்பையதீக்ஷித ஸ்வாமிகள் சர்வோத்கர்ஷராய்ப் பிரகாசிக்கின்றாரென்று தெளிவுபெறப் பிரசங்கித்து முடிவுகூறுதலும், இவ் வற்புதங்களையெல்லாம் பிரத்தியக்ஷமாகக் கண்ட வரசன் அதிக சந்தோஷத்தை யடைந்தவனாய்த் தீக்ஷித ஸ்வாமிகளைப் பணிந்து என்னுடைய அபசாரத்தைப் பொறுத்தருளவேண்டுமெனப் பிரார்த்தித்துத் தாத்தாசாரியை நோக்கி இனி யிப்படிப்பட்ட சிவாபராத விஷயத்தில் என்னை அழைப்பது யுக்தமன்றென்று திட்டம் செய்தனர்.

தீக்ஷித ஸ்வாமிகளிடத்தில் வியாசபட்டர், பராசரபட்டர் முதலியவர்களோடு தாமும் சிவதீக்ஷை பெற்றுக்கொண்டு சைவப் பிரசாரஞ் செய்துவருகையில், தாத்தாசாரி திகிலடைந்து இனியென்ன செய்வதென்றாலோசித்து, ஒருநாள் தீக்ஷிதரவர்கள் நதிக்குச் சென்று நீராடி நித்தியானுஷ்டான முடித்துக்கொண்டிருக்குஞ் சமயம்பார்த்து சில துஷ்டர்களை யேவி இது நல்ல சமயமாகையால் அவரைக் கொன்றுவிட்டு வாருங்களென்று அனுப்புதலும், அவ்வாறே சென்ற பாதகர்கள் தீக்ஷிதரை யணுகிய காலத்தில் அநேகர் சூலபாணிகளாய்த் தோற்றி அவரைச் சூழ்ந்து நிற்கவும், வந்தவர்களெல்லாம் பயந்து தீக்ஷிதரைச் சரணடைந்து தமது தீய வெண்ணத்தை வெளிப்படுத்தலும், சுவாமிக ளவர்களை நோக்கிச் சிவனடியார்களுக்குத் தீங்கு நினைக்குமப்பாதகன் இப் பூமியிலிருப்பதைப் பார்க்கிலும் ஒழிந்துபோய்விடுவது அதிகநலனென்றுரைத்துச் சாம்பமூர்த்தியாகிய சிவபெருமானே சர்வபுவன கர்த்தாவாயிருந்தால், சிவாகமங்களோடு சமஸ்த வேத புராணங்களும் உறுதிப் பிரமாணமானால், விபூதி ருத்திராக்கங்கள் தெய்வீகமுடையதானால், என்னுடைய சத்துருவாகிய துன்மார்க்கனுக்கு அகாலமிருத்து சம்பவிக்குமாக என்று பிரமாணஞ் செய்து ஓர் சுலோகம் கூறினவுடன், தாத்தாச்சாரி தலையிலே யிடி விழுந்து செத்தானென்று ஸ்ரீ சிவஞானசுவாமிகள் செய்தருளிய தீக்ஷிதமான்மியமென்னும் கிரந்தத்தால் உண்மை யினிது விளங்கும். இம் மூர்த்திகளை சிவாஷ்டமதநுவி லொன்றென்று மேலோர்கள் கூறுகின்றனர். இவரால் செய்யப்பட்ட கிரந்தங்கள் சிவகர்ணாமிர்தம், பிரஹ்மதர்க்கஸ்தவம், சிவார்க்கமணிதீபிகை, தப்தமுத்திர வித்ராவணம், பாகவத தாத்பரிய சார சங்கிரகம், இராமாயண தாத்பரிய சங்கிரகம், சிவபுராண தாமசத்வ நிராகரணம், சர்வார்த்தசார சங்கிரகம், பரிபாஷா மஞ்சரி, ஹரதத்த மான்மியம், பாஷண்டமதசபேடிகை முதலியனவாம்.

---

உ

# பொன்னேரிச்சந்திப்பு விழா.

பிரம்மஸ்ரீ தி. மா. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள்.

பொன்னேரி யென்னும் ஊர் சென்னைக்கு வடக்கே சுமார் 22 மைல் தூரத்தில் உள்ளது. கற்கத்தா ரயில் மார்க்கத்தில் அதற்கு ஒருஸ்டேஷனும் உண்டு. அவ்வூரின் ஒரு கோடிக்குக் கும்பமுனி மங்கலமென்றும் இன்னொரு கோடிக்குத் திருவாயர்பாடி யென்றும் பெயர். கும்பமுனி மங்கலத்தையடுத்துள்ள சில தெருக்களுக்கும் பொன்னேரி யென்றே பெயர் கும்பமுனி மங்கலத்தில் ஒரு சிவாலய மிருக்கிறது. அதில் சுவாமி அகத்தீசர். அம்பா ஆநந்தவல்லி. திருவாயர் பாடியில் ஒரு பெருமாள் கோயிலிருக்கிறது. அதில் சுவாமி கரிகிருஷ்ணர். அம்பா சௌந்தரவல்லி. கும்பமுனிமங்கலத்தையும் திருவாயர்பாடியையுஞ் சேர்த்து வைப்பது ஒரு கடைவீதி. அதில் ஒரு ஆஞ்சநேயர்கோயி லிருக்கிறது. பாரத்துவாச மகரிஷியின் சிலை ஒன்றும் அக்கோயிலி லுண்டு.

அவ்வூரில் அகத்தீசர் கோயிற் பிரமோற்சவம் யாது காரணத்தாலோ சில வருஷங்களாய் நின்றுவிட்டது. பிரமோத்ஸவத்திலும் இப்போது நடக்கும் ஆருத்ரா முதலிய மற்றை யுத்ஸவங்களிலும் அகத்தீசர் கும்பமுனி மங்கலத்தையும் அதை யடுத்துள்ள பொன்னேரித் தெருக்களையுமே சுற்றி வருவர். திருவாயர்பாடியை அவர் சுற்றிவரும் வழக்கம் எந்த உத்ஸவத்திலுமில்லை. ஆனால், கரிகிருஷ்ணர் கோயிலில் பிரமோத்ஸவமுதலிய சகல வுத்ஸவங்களும் இன்றும் நடந்துவருகின்றன. பிரமோத்ஸவம், ராமநவமி யுத்ஸவமுதலிய பெரிய வுத்ஸவங்களிலெல்லாம் கரிகிருஷ்ணர், ராமர் முதலிய வுத்ஸவர் திருவாயர் பாடியை மட்டுமன்றிப் பொன்னேரி தெருக்கள் கும்பமுனிமங்கலம் என்பவற்றையுஞ் சென்று சுற்றிவருவர். இவற்றை யோசிக்கின் கும்பமுனிமங்கலமே ஆதிதொட்டு பிரதான க்ஷேத்திரமாயிருந்திருக்க வேண்டுமென்பதும், திருவாயர்பாடி அப்படி யிருந்திரா தென்பதும் தெரியலாம். நிற்க:

அவ்வூரில் சந்திப்பு என்னும் ஒரு விழா வுண்டு. அது சித்திரைமீ கிருஷ்ணபக்ஷ பஞ்சமி யிரவு 2 மணிக்கு மேல் 6மணிக்குள் நடைபெறும். அப்போது தரிசனத்துக்கு அநேக ஆயிரம்ஜனங்கள் கூடுவார்கள். மிகவும் பிரஸ்தாப முள்ள விழா அது. மேற்காட்டிய ஆஞ்சநேயர் கோயிலுக்கு இடப்புறத்தில் சுமார் முக்கால் பர்லாங்கு தூரத்திலுள்ள வேலுமுதலியார் சத்திரத்தின் முகப்பில் கரிகிருஷ்ணர் கருடாரூடராய் வந்துநிற்பர். அக் கோயிலுக்கு வலப்புறத்தில் சுமார் அரைப்பர்லாங்கு தூரத்திலுள்ள கருணீக சத்திர முகப்பில் அமைக்கப்பட்டிருக்கும் பந்தலில் அகத்தீசர், ஆநந்தவல்லி, விநாயகர், ஸ்கந்தர், சண்டேசுரர் என்னும் ஐவரும் அவரவருக்குரிய வாகனங்களில் ஆரோகணித்து வந்துநிற்பர். இந்த ஐவரும் அந்த ஒருவரும் எதிரெதிராக நிற்பதால் அந்த வுத்ஸவத்துக்குச் சந்திப்பு என்னும் பெயர் வந்தது.



இந்தவிழாவிற்குப் பலர் பலவாறு தாற்பரியங் கூறுகின்றனர். அவற்றுள் இரண்டே முக்கியம். அரியுஞ் சிவனும் ஒன்றே யென்னுங் கொள்கையை விளக்குவதே அவ்விழா வென்பர் சிலர். ஆஞ்சநேயர் கோயில் முன்காலத்திற் பாரத்துவாஜ ஆசிரமமா யிருந்தது. அம் முனிவர் சிவனையும் விஷ்ணுவையும் ஒருங்கே தரிசிக்க வேண்டுமென்று தவங்கிடந்தார். அதற்கிரங்கி அவ்விருவரும் அவ்விருடிக்குப் பிரசன்னராகின்றார் என்பர்வேறு சிலர். இவ்விரு தாற்பரியங்களில் ஒன்றேனும் உண்மையாயிருக்குமோ வென்பதை அவ்வுத்சவத்தின் நடைமுறையை ஆராயுமுகத்தாற்காண்போம்.

## பிரஸ்தாப விஷயம்.

1. கரி கிருஷ்ணர் கோயிற் பிரமோத்ஸவத்தின் ஐந்தாநாளிரவே அச் சந்திப்பு. அவ்வைந்து நாட்களிலும் பின்னுள்ள ஐந்து நாட்களிலும் கரி கிருஷ்ணர் வீதி வலத்தின்போது கும்பமுனிமங்கலத்திற்குள் வந்ததும் அகத்தீச ராலயத்தைப் பிரதக்ஷிணஞ் செய்யும் வழக்கம் சுமார் 40 வருஷங்களுக்கு முன்வரையிலும் இருந்ததாம். அதை இப்போதும் அவ்வூரிலுள்ள கிழவர்கள் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

2. சந்திப்புஉத்சவத்தில் அகத்தீசரை எழுந்தருளுவிக்கும்பொருட்டுக் கரி கிருஷ்ணர் கோயிலிலிருந்து அவ்விழாத்தோறும் நூறுரூபா மரியாதை வந்துகொண்டிருக்குமாம். அகத்தீசர் அம்மரியாதையைப் பெற்றுக்கொண்டபிறகே எழுவாராம். அந் நூறு ரூபா வரவரத் தேய்ந்து பதினறு ரூபா யாகிவிட்டதாம். இவ்வருஷம் அப்பதினறுக்குமே ஆபத்து ஏற்படுவதாக விருந்ததாம். அகத்தீசர் ஒரேபிடியாகப் புறப்பட மறுத்துவிட்டாராம். அப்புறம் பன்னிரண்டு ரூபா மரியாதையாக வந்ததாம். அகத்தீசர் அந்த மரியாதையாவது வந்ததேயென்று அப்பன்னிரண்டையும் பெற்றுக்கொண்டு சந்திப்புக்குப் புறப்பட்டாராம்.

3. கரிகிருஷ்ணர் முன் அகத்தீசரைப் பிரதக்ஷிணம் வந்துகொண்டிருந்த வழக்கத்தை நிறுத்திவிட விரும்பி அதற்குப் பிரதியாக அவ்வீசருக்கு ரூபா நூறு வருஷந்தோறும் கொடுத்து வருவதாகச் சம்மதித்தாராம். அகத்தீசரும் அந்த விருப்பத்துக்கு இசைந்தனராம். அந்த மரியாதைதான் மேல் 2-ம் பாராவிற் கண்ட மரியாதை யென்றுஞ் சொல்லப்படுகிறது.

## பிரத்தியக்ஷ விஷயம்.

4. சந்திப்பன்று இரவில் கரிகிருஷ்ணர் கோயிலைவிட்டுப் புறப்பட்டு வேலு முதலியார் சத்திரமுகப்புப் பந்தலுக் கருகில் வந்துநின்ற பிறகுதான் அகத்தீசர் தம் கோயிலை விட்டுப் புறப்படுவர்.

5. அகத்தீசர் தமக்கென் றமைக்கப்பட்ட பந்தலில் தமது பரிவாரங்களோடு வந்து புகும்வரைக் கரிகிருஷ்ணர் தமக்கென்றமைக்கப்பட்ட வேலுமுதலியார் சத்திர முகப்புப் பந்தலிற் புகவே கூடாது. அப் பந்தலுக்கு மிகவும் சமீபத்தில் வெளியிலேதான் அவர் நின்றுகொண்டிருக்க வேண்டும். அகத்தீசர் தம்பந்தலிற் புகுந்து தங்கின பிறகே கரிகிருஷ்ணர் தம்பந்தலிற் புகுவர்.

6. இந்த விழாவில் பாணவேடிக்கைகள் நடப்பதுண்டு. அச் செலவு கரிகிருஷ்ணரைச் சேர்ந்ததே. ஆனால், ஈசுவரன் தம்பந்தலில் வந்து தங்கிய பின்னர்த்தான் அப் பாணவேடிக்கை நடக்கவேண்டும்.

7. இருதிறத்தாருந் தந்தம் பந்தலில் வந்து தங்கினதும் முதன்முதல் கரிகிருஷ்ணரிடமிருந்து மேளதாளத்தோடு மாலை மரியாதை அகத்தீசருக்குப் போகும். அதை ஏற்றபின் அகத்தீசர் தாமொரு மாலையை அங்ஙனமே கரிகிருஷ்ணருக்கு அனுப்புவர்.

8. இந்த மாலைமரியாதைகள் முடிந்தபிறகு பெருமாளும் ஈசுவரரும் ஒருவரையொருவர் நெருங்கி வருவர். அப்போது பெருமாள் ஆஞ்சநேயர் கோயிலுக்கெதிரில் வந்துநிற்பர். ஆனால், அவர் அக்கோயிலைப் பார்க்கத் திரும்புவதில்லை. அக் கோயிலிலுள்ள பாத்துவாசருக்கு அவ்வுத்ஸவத்திலிருப்பதாகச் சொல்லப்படும் சம்பந்தத்தை விளக்கும் ஒருநிகழ்ச்சியும் அப்போது கிடையாது. ஈசுவரர் அவ்வாஞ்சநேயர் கோயிற்பக்கமே போவதில்லை. தமது பந்தலைவிட்டுப் பெருமாளை நோக்கி வருகிற அவர் அவ்வாஞ்சநேயர் கோயிலுக்கும் அப்பந்தலுக்கு மிடையிலுள்ள மத்திவரை வந்து நின்றுவிடுவர். அவர் நிற்கு மிடத்திற்கும் பாத்துவாஜ ரிருக்கு மிடத்துக்குமுள்ள தூரத்தைக் கவனித்தால் ஈசுவரர் அம்முனிவருக்குக் காட்சிகொடுக்க வந்துளாரென்று யாருமே சொல்லமாட்டார்.

9. அப்பால் அகத்தீசருக்குங் கரிகிருஷ்ணருக்குங் கர்ப்பூரமாகும். ஆனதும் ஈசுவரர் தங்கோயில் போய்ச் சேர்வதற்காகத் தாம் வந்தவழியை நோக்கி ஒரோ பாய்ச்சலாகத் திரும்பிவிடுவர். அவரும் அவரது பரிவாரங்களும் சுமார் முக்கால் பர்லாங்கு தூரஞ் செல்லும்வரையும் பெருமாள் தாம் நின்றவிடத்திலேயே நின்றுகொண்டிருப்பர். அப்புறம் அவர் ஈசுவரர் பின்னாலேயே சென்று பொன்னேரித் தெருக்களையும் கும்பமுனி மங்கலத்தையுஞ் சுற்றிக்கொண்டிருப்பர். அகத்தீசர் ஆலயஞ் சென்றதுங் கரிகிருஷ்ணர் திருவாயர்பாடி சென்று தம்மாலயம் புகுவர். அரியுஞ் சிவனும் ஒன்றென்பதைக் காட்டுவதே அவ்விழாவென்பது உண்மையாயின், அகத்தீசரும் கரிகிருஷ்ணருந் தாம் சந்தித்த விடத்திலிருந்து பொன்னேரித்தெரு, கும்பமுனி மங்கலங்களுக்குப் புறப்படும்போது கை கோத்தாப்போல் ஒருவர் பக்கத்தில் ஒருவர் போய்க்கொண்டிருக்கவேண்டும். ஒருவர்பின் னொருவர்போதல் அத்துணைப் பொருத்தமாகாது. இன்னும், அரியுஞ்சிவனு மொன்றென்பார் சண்டேசுரரையும் அரியோடு சமமென்று சொல்லார். ஈசுர பரிவாரங்களில் அவரும் வந்து நிற்பதால் அவ் வபேதக் கொள்கை பங்கமடைகிறது.

இத்தனையையும் மொத்தமாக வைத்துக்கொண்டாராயுமெமக்கு, அகத்தீசரைக் குறித்துக் கரிகிருஷ்ணர் ஐந்துநாள் ஆராதிக்கிறாரென்பதும், அகத்தீசர் அவ் வாராதனைக்கு மகிழ்ந்து தம் பரிவாரங்களோடு எழுந்தருளிவந்து கரிகிருஷ்ணருக்குப் பிரசன்னராகி யநுக்கிரகித்துவிட்டுத் திரும்புகிறாரென்பதும், ஆகலின் அச்சந்திப்பு உத்சவத்தின் தாற்பரியம் கரிகிருஷ்ணருக்கு அகத்தீசர் காட்சியளித்தலே யென்பதும், பிறவுமே புலப்படுகின்றன. மற்றையோரும் அவ்வுண்மையை யாராய்ந்து வெளியிடின் அப்பெரியவுத்ஸவம் பக்தகோடிகளுக்கு மிகுந்த வுபகாரமாகும். இதிற் பூர்வபட்சஞ் செய்யப்பட்டிருக்குந் தாற்பரியங்களையே அவ்வூர்த் தலபுராணஞ் சொல்லுவதாக அப்பூர்வபட்சிகள் சொல்வர். எமது தீர்மானத்தால் அப்புராணமும் ஆராய்ந்தன்றிக் கொள்ளப்படா தென்பதையுங் கவனித்திடுக.

---

உ

# தையல்சொற் கேளேல்.

ஐயங்கார்குளம் சைவபுராணிகர்
திரு. அ. க. பொன்னுச்சாமி முதலியார் அவர்கள்.

இஃது, ஔவையெம் மன்னையின் அமுதவாக்கிய மென்பது தமிழுலகறியும். இதில் அமைந்துள்ள பொருள், பெண்களின் பேச்சைக் கேளாதே என்பது. ஆனால், இல்லறத்திலிருந்து இருமைப் பயனு மடைவதற்கு இன்றியமையாத துணையாவாள் மனைவி. இதுபற்றியன்றோ தெய்வப்புலமைத் திருவள்ளுவர் வாழ்க்கைத்துணைநலம் என்ற அதிகாரத்தில், 'துறந்தார்ப் பேணல், விருந்தயர்தல், வறியார்மாட் டருளுடைமை முதலிய நற்குணங்களும், வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து கடைப்பிடித்தல், அட்டிற்றொழில் வன்மை, ஒப்புரவு செய்தல் முதலிய நற்செய்கைகளுமுடைய 'மனைமாட்சி யில்லாள்க ணில்லாயின் வாழ்க்கை, யெனைமாட்சித் தாயினு மில்' என்று கூறினர். இத்தகு மனைவி யின்றேல் இல்வாழ்க்கையே இன்றாம். புருடனுக்கு உலகசுகமும் அடியோடு இன்றாம். கணவனுக்குச் சில சமயத்தில் மந்திரியைப்போல் புத்தி புகட்டக் கூடியவளென்று மனைவியைப்பற்றி நீதிநூல்கள் புகலாநிற்கும். அப்போது இல்லவள் வார்த்தையைக் கணவன் கேட்கவு நேரிடுகிறது. 'தையல்சொற் கேளேல்' என்ற வாக்கியம் அப்போது தவறா மல்லவா? மேலும், குடும்பவிஷயங்களில் சில சமயத்தில் நாயகன் நாயகியின் அபிப்பிராயங்களைக் கேட்டு நடக்கவேண்டிய சம்பவங்கள் நேர்கின்றன. சில வார்த்தைகள் மனைவியையன்றி வேறு யாரிடத்திலுங் கூறத் தகாதவைகளாகவு மிருக்கின்றன. உலகில் மனையாளோடுகூடி இல்லறம் நடத்துபவர்கள் இதையெல்லாம் அனுபவத்திலறிவார்கள். இவ்வாறிருக்க: பெண்ணின் பேச்சைக் கேளாதே யென்று கூறுவது முரணன்றோ? ஆனால், ஔவையார் தன்போன்ற மகளிருக்கு அகௌரவத்தை யுண்டாக்கத்தக்கதான அத்தகைய கட்டளையை நியாயமின்றிக் கூறியிருப்பாரா? தெய்வப்புலமைத் திருவள்ளுவரும் தாமருளிய திருக்குறளில் பெண்வழிச்சேறல் என்கிற அதிகாரத்தில், 'மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார், வேண்டாப் பொருளு மது': அதாவது, மனையவள்வழியிலே நடப்பவர் தருமத்தை யடையார்; கேவலமாகிய மிருகசுகத்தை யனுபவிப்பதன் காரணமாக மனைவிமேல் ஆசைகொண்டு அவள் சொன்னபடி நடப்பவன் இல்லறத்தின் பயனை யடையமாட்டான் என்றும், தன்னுடைய ஆண்மைத்தன்மையைவிட்டு மனைவியின் பெண்மையை விழைந்தவன் அடைந்த செல்வம் அவனுக்கு நாணத்தையளிக்கும் என்றும், மனைவிக் கஞ்சிநடக்கும் புருடன் மறுமைப்பயனை இழப்பானென்றும், மனைவியின் ஏவற்படி நடப்பவன் அவளினுந் தாழ்ந்தவனென்றுங் கூறியிருக்கின்றார். ஆனால், தையல்சொற் கேளேல் என்பதின் முடிவுதானென்னையெனின், கண்மூடித்தனமாய் எல்லா விஷயங்களிலும் மாதர்பேச்சைக் கேட்டே நடக்கலாகாது; ஆடவன் ஒரு விவகாரத்தில் தான் இப்படி நடந்துகொள்வதே தகுதியென . மனதில் திடமாய்த் தேறித் தெளிந்த பின்பு மனைவியிடத்தில் வைத்த ஆசையாலோ, அச்சத்தாலோ தன் மனதிற் கொவ்

வாதிருந்தும் மாதர்வார்த்தையைக் கேட்டுக்கொண்டு தன் அபிப்பிராயத்திற்கு மாறாக நடக்கலாகாது. சீதாபிராட்டி தன்முன் உலாவிய மானைப் பிடித்துத் தரும்படி கேட்டபோது இலட்சுமணன் இது மானல்ல, மாய மான், அரக்கரது சூழ்ச்சியென்று தடுத்தும், ஸ்ரீராமன் மனைவிபால் வைத்த மயக்கத்தால் வில் அம்புடன் துரந்து அதனால் விளைந்த துயர் பலவல்லவா? ஆதலின், மனைவியின் பேச்சுப்படி எப்போதும் நடந்துவிடுவது ஒருபோதும் புருடத்தன்மை யாகாது. பெண்களில், மிக்க உலோபகுணமுடைமை, கிடைத்ததில் திருப்தியின்மை, பொறாமையுடைமை, பட்சபாதமுடைமை முதலிய தீயகுணமுடையவரு முளர். இதனாலன்றோ 'பேய்கொண்டாலுங்கொளலாம் பெண்கொள்ள லாகாது' என்றும் 'பெண்ணாகி வந்தொரு மாயப்பிசாசம் பிடித்திட்டு என்னை' என்றும், 'நன்மனை தோறும் பெண்டிரைப் படைத்து நமனையென் செய்யப் படைத்தனையே' என்றும், 'கூற்றமே யில்லிற் கிசைந்தொழுகாப் பெண்' என்றும், 'தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்' என்றும் பெரியோர்கள் கூறினார்கள். இத்தகைய பெண்கள் வார்த்தையைக் கேட்டால், கணவர்களுக்குப் பாபமும் பழியும் இழிவான பெயரும் கௌரவத் தாழ்வும் உண்டாகுமென்பது பற்றியே நமது மூதாட்டியார் தையல்சொற் கேளே லென்றார். ஆடவர்களாயுள்ளவர்கள் தாங்கள் எதைச் செய்ய நேர்ந்தாலும் தங்களுக்குப் பாவமாவது பழியாவது மரியாதைத் தாழ்வாவது வேறு தீங்காவது நேரிடாவண்ணம் தங்களுக்குள் சிந்தித்து தங்கள் தீர்மானப்படியே செய்வதுதான் உத்தமம்; அவர்கள்தாம் புருடர்கள் என் றழைத்தற் குரியவர். தம்முடைய வாழ்க்கைத் துணைவியாகிய மனைவியின் சகல குணங்களையும் முதலிலேயே நன்றாயறிந்துகொண்டு நமக்கு இவ் வுலகில் புகழ், புண்ணியம் முதலிய வுண்டாக்கத் தக்க யோசனைகளையே கூறும் புத்தி யிவளிட மிருக்கிறதா வென்பதை யறிந்துகொண்டு, அப்படி யுடையவளாயின் அவள் கூறுந் தகுதியான யோசனைகளைக் கொள்ளவேண்டியதே தவிர, நற்குண நற்செய்கை யில்லாதவர்களாகிய தையல்சொற் கேட்க லாகாதென்பதே கருத்தாகும்.

---

# சிவ பஞ்சாக்கரம் ஜெபித்தலின் பலன்.

(திரு. அ. முத்தையப்பிள்ளை அவர்கள், கண்டாச்சிபுரம்)

பஞ்சாக்கரம் என்பது ஐந்தெழுத்துக்களாலாகிய மூலமந்திரம். பஞ்சாக்கரம் தூலம், சூக்குமம் என இருவகையின் பாற்படும். 'ந'கரமாதியாக வுள்ள வைந்தெழுத்தும் தூலமென்றும், 'சி'கரமாதியாகவுள்ள வைந்தும் சூக்குமம் என்றுங் கூறுவர். இவை முறையே கட்டுநிலையையும், வீட்டுநிலையையும் குறிக்கும். பஞ்சாக்கரமானது, சிவபெருமானது சத்தியோசாதம், வாமம், அகோரம், தற்புருடம், ஈசானமாகிய வைந்து திருமுகங்களினும் சிருட்டியாதி பஞ்சகிருத்தியங்களை யியக்குஞ் சத்திகளை யதிட்டித்துக்கொண்டிருப்பனவாம். பஞ்சாக்கரத்தி லுள்ள 'ந' திரோதாயியையும், 'ம' ஆணவ மலத்தையும், 'சி' சிவத்தையும், 'வ' சத்தியையும், 'ய' ஜீவ



னையுங் குறிப்பதாகும். 'நமசிவய' என்னுஞ் சொற்றொடருக்குச் 'சிவனுக்கு வணக்கம்' என்னும் பொருள்படுகிறது.

"படைத்து மவையளித்தும் பண்ணியவை யெல்லாந்
துடைத்தும் மறைத்தும் துயர்நின் — றெடுத்தும்
ஒழியாத வைந்தொழிலு முற்றிடு'ந'வ் வாதி
மொழியான வைந்தெழுத்தும் முன்."

என்றும்,

"செகம் படைத்தது மைந்தெழுத்தாம் பின்னும்
சீவன் படைத்தது மைந்தெழுத்தாம்
யுக முடித்தது மைந்தெழுத்தாம் பின்னும்
உற்பவ மானதும் ஐந்தெழுத்தாம்."

என்றும்,

கூறிய ஆன்றோர்களின் மொழியால் சிருட்டியாதி யைந்தொழிலுக்குங் காரணம் பஞ்சாக்கரமே என்னும் உண்மை வெளிப்படும். சிவபஞ்சாக்கரமாகிய பிரணவத்தைக் கொண்டே இறைவன் படைத்தலாதி யைந்தொழி லியற்றுவதால், நாமும் இச் சிவ பஞ்சாக்கர ஜெபத்தைக் கொண்டே எத்தகைய அரும்பெருஞ் செயல்களையும் எளிதிற் செய்யலாம். பஞ்சாக்கரத்தைத் தக்க ஞானாசாரியர்மூலம் உணர்ந்து விதித்த காலங்களில் முன்பின் மாறாமலும், அசிரத்தை யில்லாமல் சிரத்தையோடும் உள்ளுக்குள்ளாகவே ஜெபித்தல் வேண்டும். 'நாவினுக் கருங்கலம் நமச்சிவாயவே' என்று நாவரசர் நவின்றுள்ளா ராதலின், பஞ்சாக்கரஞ் செபிக்காத நா அணியிழந்ததே எனவிளங்குகிறது.

அஞ்செழுத் தோதுவோர்க் கஞ்சாமை யுண்டாம்; அபாயமுமின்றாம். இதனை, நமது நாவுக்கரையரைச் சமணர்கள் நீற்றறையிலிட்டும், விடமுண்ணக் கொடுத்தும், மதயானையை விடுத்தும், கருங்கல்லிற் கட்டிக் கடலிடை வீழ்த்தியும் கொல்ல முயன்றபோது அன்பே யுருவாய நமது அப்பர் அஞ்சா நெஞ்சுடையராய், அஞ்செழுத்தோதி யுய்ந்தனர் என்பதனாலும்,

"சிவாய நமவென்று சிந்தித் திருப்போர்க்
கபாய மொருநாளு மில்லை."

என்னும் ஆன்றோர் வாக்காலும் அறியக்கிடக்கின்றது.

"காவின் மன்னவ னெதிர்க்கினுங் காமன்
கணைக ளேவினுங் காலனே வரினும்
பூவின் மன்னவன் சீறினுந் திருமால்
போர்க்கு நேரினும் பொருளல நெஞ்சே!

ஒவின் மாதுய ரெற்றினுக் கடைந்தா
யொன்று மஞ்சல்நீ யுளவறிந் திலையோ?
நாவின் மன்னரைக் கரைதனிற் சேர்த்த
நமச்சி வாயங்கா ணும்பெறுந் துணையே."

"ஏ மனமே! இந்திரன் நம்மை யெதிர்த்து வந்தாலும், மன்மதன் மலர்க்கணைகளை யேவி வருத்தினும், காலனே நமதுயிரைக் கவர வரினும், காவலன் நம்மைக் கடிந்துரைப்பினும், திருமால் போர்க்குச் சீறி யெதிர்க்கினும் நமக்கு ஒரு பொருளல்ல. திருநாவுக்கரசு சுவாமிகளைக் கரையேற்றிய பஞ்சாக்கரம் நமக்குப் பெருந்துணையாக இருக்க நீ ஏன் அஞ்சுகிறாய்!" என திருவருட்பிரகாச வள்ளலார் திருவாய்மலர்ந் தருளினர். இத்தகைய அஞ்சாமையை யளித்தது இவ்வஞ்செழுத்தன்றோ? மாயையால் மனமாகிய கல்லிற் கட்டுண்டு பிறப்பிறப்பென்னும் சம்சாரமாகிய சாகரத் தழுந்திய வுயிரைக் கரையேற வைப்பது மிவ் வைந்தெழுத்தே.

"கொல்வா ரேனுங் குணம்பல நன்மைகள்
இல்லா ரேனும் இயம்புவ ராயிடின்
எல்லாத் தீங்கையு நீக்குவ ரென்பரால்
நல்லார் நாம நமச்சி வாயவே"

'நரக மேழ்புக நாடின ராயினு
முரைசெய் வாயின ராயி னுருத்திரர்
நிரவி யேபுகு வித்திடு மென்பரால்
வரத னுமை நமச்சி வாயவே"

என்னும் ஆளுடைய பிள்ளையா ரருண்மொழிப்படி, எப்படிப்பட்ட தீங்கிழைத்தவராயினும் சிவபெருமானது திருவைந்தெழுத்தால் பரிசுத்தராவர் என்பது பெறப்படுகிறது. இத்தகைய புனிதமாக்கும் பொற்பமைந்த திருவைந் தெழுத்தை யொருவன் இடைவிடாது தியானம் செய்வானாயின், அவனது மனத்தகத்தே பெருமான் திருக்கோயில் கொள்வர். இவ்வாறு சிவபெருமானை மனத்தகத்தே நிறுத்தும் பேறுபெற்றவர்க்கு ஆகாத காரியமும் இவ்வுலகிலுண்டோ?

"அஞ்சுக அஞ்செழுத் துண்மை யறிந்தபின்
நெஞ்சகத் துள்ளே நிறையும் பராபரம்,"

"சிவசிவ வென்கிலர் தீவினை யாளர்
சிவசிவ வென்றிடத் தீவினை மாளும்
சிவசிவ வென்றிடத் தேவரு மாவர்
சிவசிவ வென்றிடச் சிவகதி தானே"



என்ற திருமூலர் திருவாக்கால் சிவபஞ்சாக்கரஞ் செபிப்பவரது மனமே சிவனிருப்பிடமென்பதும், அவர்கள் வினையை வென்று விண்ணவரா யமர்ந்து வீடு பெறுவர் என்பதும் வெள்ளிடைமலை போல் விளங்குகின்றன.

மன மொழி மெய்களால் இறைவனுக்குத் தொண்டாற்றும் நமது வாகீச முனிவர் "நாமார்க்குங் குடியல்லோம் நமனை யஞ்சோம்" எனக் கூறியுள்ளனர். இதனால், அரனடியார்கள் ஐந்தெழுத்தோதுபவராதலின் அவரிடம் அந்தகன் அணுகான் என்பது புலனாம். இடைவிடாது மூலமந்திரமாகிய சிவபஞ்சாக்கரஞ் செபிப்பவன், தன்மூச்சை 16மாத்திரை உள்ளுக் கிழுத்து, 64மாத்திரை உளளே கும்பகஞ் செய்து, 32மாத்திரை வெளிவிடுகிறான். ஆகையால், அவனுக்குச் சாதாரணமாய் மூச்சை 16மாத்திரை உள்ளுக் கிழுத்து, 24மாத்திரை வெளிவிடுங்கால் ஏற்படும் 8மாத்திரை நஷ்டமேற்படவில்லை. ஆகவே, அவனது ஆயுட்காலம் நீடிப்பதால் நமனுக்கு அஞ்சான்: இதனாற்றான் முற்காலத்தில் முனிவர்கள் பிராணயாமத்தைக் கையாண்டிருந்தனர்.

"கூற்றை அஞ்ச வுதைத்தன அஞ்செழுத்துமே" என்றார் ஸ்ரீ ஞானசம்பந்தப்பெருமான். அஞ்செழுத்தை நெஞ்சிற் பதித்தோர் நமனுக்கஞ்சார். நடுவனும் இன்னோரைக் கண்டு நடுங்குவன். இது குறித்தே "எரம்பன், அஞ்சுமுகச் சிந்துரனுக் காளானாற் சண்டனமக், கஞ்சுமெழுத் தஞ்சுமா னாம்" என்று காழி கண்ணுடைய வள்ளலார் தமது பஞ்சாக்கரமாலை என்னும் நூலில் பிரணவரூபியாகிய விநாயகக் கடவுளைத் தோத்திரிக்கின்றார்.

சிவபஞ்சாக்கர ஜெபம் செய்வோர் சம்சாரமாகிய சாகரத்தில் துன்பமாகிய அலைக்குச் சிறிதும் அஞ்சாது கடவுளின் திருவருள் என்னும் மரக்கல மேறிப் பேரின்பமாகிய முத்திக்கரை சேர்வர் என்பது திண்ணம்.

நெறியுண்டாம் நல்ல நிலையுண்டாம் ஞானக்
குறியுண்டா மெண்ணமெலாங் கூடும்—செறிவுண்டாம்
ஆதி அருணகிரி அண்ணலார் ஐந்தெழுத்தை
ஓதிமட நெஞ்சமே யுன். (அருணகிரியந்தாதி.)

தவியா திருநெஞ்ச மேதில்லை மேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞானா கரனைப் புராந்தகனை
அவியா விளக்கைப்பொன் னம்பலத் தாடியை ஐந்தெழுத்தாற்
செவியாம னீசெவித் தாற்பிற வாமுத்தி சித்திக்குமே.
(பட்டினத்தார்.)

———

உ

# சிவத்தினியல்பு.

சுதுமலை அம்மன்கோயில்
சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக் குருக்கள் அவர்கள்.

(திங்கள் உ: ௩௫-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வகையில் விஷ்ணுவும் பிரமனும் பிரகிருதியுட்பட்டவராகலின், அவ்வியல்புடைய சகலவர்க்கத்துள் அதிகாரம் பெற்றவரென எண்ணப்படுவர். உருத்திரமூர்த்தி பிரகிருதியை நீங்கினவராகலின், அவ்வியல்புடைய பிரளயாகலருள் முத்தராய் அதிகாரம் பெற்றுச் சிவவடிவெய்தி நிற்பவராக எண்ணப்படுவர். மகேசுவர சதாசிவர்கள் ஈசுவரசாதாக்கிய தத்துவ நிலையராகலின், முதல்வனது சுதந்திரவடிவமாகிய அதிகார போக ரூபங்களாம். இவையனைத்தினும் பதியினது சத்தியே விளங்குவதாம். நெருப்பானது ஒன்றிற்றங்கி நின்றல்லாது தொழில் செய்யாது. அதுபோலவே சிவசத்தியும் ஒவ்வோர் வடிவினை யதிட்டித்து நின்றே தொழில் செய்யும். தாமரையின் காரியப்பாடு சூரியகிரண சம்பந்தத்தால் சம்பவித்தல் போல, ஐந்தொழிற் படுமுறைமை சிவசத்தி சம்பந்தத்தால் நிகழ்வனவாம்.

அதனால், இறைவனுக்கு உளதாகிய இந்த இயல்பு பொது வியல்பு எனப்படும்.

தாமரைக்குஞ் சூரியனுக்கும் உளதாகிய சம்பந்தம் எத்துணையோ, அத்துணையே, உலகுக்கும் பதிக்கும் உளதாகிய சம்பந்தமும், அது பற்றி வரும் பொது வியல்புமாம்.

சூரியனாலே தாமரை காரியப்படுமென்பது மறுக்க இயலுவதன்று. அதுபோலவே உலகம் பதிப்பொருளாற் காரியப்படுறும் என்பதும் மறுக்கத்தக்கதல்ல.

இனி, முதல்வன் உயிர்கள் பொருட்டாகக் கொள்ளும் பருவங்களில் உமாமகேஸ்வரர், சபாபதி முதலியவாக இருபத்தைந்து வடிவங்களும், அவற்றுள்ளும் பலபேதங்களும் உளவென்பது உண்மையாம். அவை ஒவ்வோர்காலத்து ஒவ்வொருவர் பொருட்டு ஒவ்வொரு காரணம்பற்றிக் கொள்ளப்பட்டன. இந்த இருபத்தைந்து மகேவலமூர்த்தங்களும் மகேஸ்வரரால் கொள்ளப்படுவன. உருத்திரற்கும் அவை உரியனவேயாம். பிரமவிஷ்ணுக்கள் அவ்வடிவினை எடுத்தற்கு உரியவரல்லர். அவரது சகலநிலையே அங்ஙன மொழிதற்குக் காரணமாம்.

இதுவரையும் சொல்லியவற்றால், சிவம், சத்தி, பதி, சத்திபேதங்கள், பதி பேதங்கள், அதிட்டான வடிவங்கள் என்பன நுனித்து அறியக் கிடக்கின்றன. சிவத்தினியல்பும் பொதுவியல்பும் வெள்ளிடைமலைபோல் விளங்கக்கிடந்தன. இவற்றினுண்மை அறிந்தவர்களே சிவத்தினியல்பை அறிந்தவராவார்கள்.

---

உ

கணபதி துணை.

காஞ்சீபுரம் மகாவித்துவான்
சபாபதி முதலியார் இயற்றிய

# திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா.

இது
சென்னை
மகாமகோபாத்தியாய—தாக்ஷிணாத்ய கலாநிதி
**டாக்டர் உ. வே. சாமிநாதையரால்**
பரிசோதிக்கப்பெற்று
நூதனமாக எழுதிய குறிப்புரை முதலியவற்றுடன்

பலவான்குடி
"சிவநேசன்" அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

ஸ்ரீமுக௵ ஐப்பசி௴

**1933**

Copyright Registered

[விலை அணா 4.

உ

கணபதி துணை.

# திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா.

## முகவுரை.

---

திருவாசகம்.

திருச்சிற்றம்பலம்.

பூணொ ணாததொ ரன்பு பூண்டு பொருந்தி நாடொறும் போற்றவும்
நாணொ ணாததொர் நாண மெய்தி நடுக்க டலுள ழுந்திநான்
பேணொ ணாத பெருந் துறைப்பெருந் தோணி பற்றி யுகைத்தலும்
காணொ ணாத்திருக் கோலநீ வந்து காட்டி னாய்கழுக் குன்றிலே.

திருச்சிற்றம்பலம்.

தமிழ்ப்பிரபந்தங்களுள் வெண்பாவாலமைந்த நூல்கள்பல. பாட்டுடைத் தலைவருடைய நாடு முதலிய பத்து அங்கங்களைச்சிறப்பித்து வெண்பாவாற் பாடப்படுவனவாகத் தசாங்கம், சின்னப்பூ என்னும் இரண்டு பிரபந்தங்கள் உண்டு. அவ்வங்கங்களுள் ஏதேனும் ஒன்றனைத் தனியே சிறப்பித்து நூறுவெண்பாக்களாற் பாடுவதும் மரபு. அவை அவ்வப் பெயராலேயே வழங்கும். ஊரைச் சிறப்பித்துப் பாடுவது ஊர்வெண்பா எனப்படும். தலைவர்களுடைய ஊர்களைச் சிறப்பித்துப் பாடப்பெற்ற பழைய தனிச்செய்யுட்கள் பல உண்டு. கலம்பகத்திற்கு உறுப்பாகவும் அத்தகைய செய்யுள் வரும்.

பிற்காலத்தில் தலங்களைச் சிறப்பித்துப் பாடிய வித்துவான்கள் பலர் தாம் நூல்செய்யப் புகுந் தலத்தின் பெயரை இரண்டாமடி மூன்றாஞ்சீரில் வைத்து முன் இரண்டடிகளிற் சிலேடையையும் பின்னிரண்டடிகளில் திரிபையேனும் மடக்கையேனும் அமைத்து இயற்றிய பிரபந்தங்கள் பல. அவை ஊர் வெண்பாக்களேயாம். முதல் ஐம்பது பாடல்கள் சிலேடையின்றியும் பின் ஐம்பது சிலேடையுடனும் அமைந்துள்ள நூல்கள் சில. இவ்வகையிற் பின்னும் வேறுபாடுள்ள நூல்கள் பல உண்டு.

திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பா என்பது காஞ்சீபுரம் மஹாவித்துவான் சபாபதிமுதலியார் திருக்கழுக்குன்றத்தைச் சிறப்பித்துப் பாடிய பிரபந்தமாகும்.

திருக்கழுக்குன்றமென்பது தொண்டை நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற தலங்கள் முப்பத்திரண்டனுள் ஒன்று. சைவ சமயாசாரியர்கள் நால்வராலும் பாடப்பெற்ற திருப்பதிகங்களை உடையது. அந்தகக்கவி வீரராகவமுதலியாரென்னும் கவிஞர்கோமானால் தமிழ்க் காப்பிய இலக்கண மமைந்து சொற்சுவை பொருட்சுவை மலிந்து விளங்கும்படி இயற்றப்பெற்ற புராணமொன்று இதற்கு உண்டு. அவராலும் பிறகவிஞர்களாலும் இயற்றப்பெற்ற பிரபந்தங்கள் சில இத் தலவிஷயமாக உள்ளன. பல புலவர்களாற் பல சமயங்களிற் பாடப்பெற்ற தனிப்பாடல்களும் பல உண்டு. இந்தத்தலத்தின் பெருமை மகா புராணங்களிலும் பிறதலபுராணங்கள் பலவற்றிலும் வேறு பல நூல்களிலும் இடையிடையே காணப்படும்.

இன்றும் சம்பு ஆதி என்னும் பெயருடைய முனிவரிருவர் கழுகுவடிவமாக நாடோறும் வந்து தரிசித்துப் பிரசாதம் உண்டு தெய்வநம்பிக்கையற்றவர்கட்கும் தெய்வபக்தியை உண்டாக்கும் அருமைத் திருக்காட்சியினால் உலகமெல்லாம் புகழப்பெறுவதும், அந்தமகிமையினால் பட்சிதீர்த்தம் என்று வழங்கப்பெறுவதும், பிரபல யாத்திரை ஸ்தலங்களுள் ஒன்றாகவிளங்குவதும், கிரிப்பிரதட்சிணஞ்செய்வதனால் தீராப் பிணிகளெல்லாம் தீரச்செய்யும் அற்புதம் வாய்ந்திருப்பதும் யாவரும் அறிந்தனவே. இத்தலத்தில் மாணிக்கவாசகருக்குச் சிவபெருமான் குருதரிசனம் காட்டியருளினார். நந்திதேவர், இந்திரன் முதலியோர் இங்கே வழிபட்டுப் பேறுபெற்றனர்.

இத்தலத்தில் எழுந்தருளியுள்ள விநாயகர் திருநாமம் வண்டுவனப் பிள்ளையாரென்பது. சிவபெருமான் திருநாமம் வேதகிரீசர் என்பது. அம்பிகையின் திருநாமம் பெண்ணினல்லாளென்பது. நான்கு வேதங்களும் நான்கு மலைவடிவமாக இருத்தலால் இத்தலம் வேதகிரியெனவும் வழங்கப்பெறும். இங்ஙனம் ஒவ்வொரு காரணத்தால் இதற்கமைந்த நாமங்கள் பல. இங்கே சங்கதீர்த்தம் முதலிய பல தீர்த்தங்கள் உண்டு.

இந்நூல் திருக்கழுக்குன்றத்து வெண்பாமாலை (காப்பு), கழுக்குன்றமாலை யெனவும் வழங்கும்.

காப்புச்செய்யுட்கள் இரண்டும் வாழ்த்துச் செய்யுள் ஒன்றும் முன்புஅமையப் பின் சிலேடையின்றி ஐம்பதுசெய்யுட்களும் அவற்



றின்பின் சிலேடையாக ஐம்பதும் இதில் உள்ளன. 51, 53முதல் 89-ஆம் செய்யுட்களில் இருபொருட் சிலேடையும், 52,90முதல்95ஆம்செய்யுட்களில் முப்பொருட்சிலேடையும்,96முதல்100ஆம்செய்யுட்களில்நாற்பொருட்சிலேடையும் அமைந்துள்ளன. செம்மொழிச் சிலேடை, பிரிமொழிச்சிலேடை என்னும் இரண்டுவகையும் இதில் விரவிவந்துள்ளன. பின் அடியிரண்டும் மடக்காக உள்ள செய்யுட்கள்: 17, 19. முன் அடியிரண்டும் பின்அடியிரண்டும் மடக்காக உள்ளவை: 45—9. ஏனையவை பின்னிரண்டடிகளும் திரிபாக உள்ளவை.

இந்நூலின் ஆசிரியரான கா. சபாபதி முதலியார் காஞ்சீபுரத்திற் பிறந்தவர். அந்த ஊரிலிருந்த தமிழ் வித்துவான்களிடத்திலும் பின் திருவாரூர் சென்று அங்கேயிருந்த சைவப் பெரியாரொருவரிடத்தும் தமிழ் இலக்கண இலக்கியங்களை முறையே அவர் கற்றார். பின்பு சென்னையிலும்சிலவித்துவான்களிடத்திற்பாடங்கேட்டனர். சென்னைப் பச்சையப்பன் கலாசாலையில் தமிழாசிரியராகப் பலவருடங்கள் இருந்துவந்தனர். பல சைவநூல்களையும் பிரபந்தங்களையும் பதிப்பித்தனர். சிலநூல்களுக்கு உரையெழுதினர். பல பிரபந்தங்களும் சில ஸ்தலபுராணங்களும் இயற்றினர். பலர் வேண்டுகோளின்படி வாரந்தோறும் ஸ்ரீ ஏகாம்பரேசுவரர் கோயிலிற் சைவப்பிரசங்கம் செய்துவந்தனர். சென்ற நூற்றாண்டில் சென்னையில் தமிழ் நூல்களைப் பலருக்கும் முறையே பாடஞ் சொல்லித் தமிழறிவைப் பரப்பிய பெரியார்களுள் அவரும் ஒருவர். அவரிடம் பாடங்கேட்ட மாணவர்கள் புரசை அஷ்டாவதானம் சபாபதி முதலியார் முதலிய பலர். என்னுடைய ஆசிரியராகிய திரிசிரபுரம் மகா வித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களுக்குப் பாடஞ் சொன்னவர்களுள் அவரும் ஒருவர். அவரிடத்தில் பிரபுக்கள் பலர் நன்மதிப்பு வைத்து அவரை ஆதரித்து வந்தனர்.

பல வருடங்களுக்கு முன்பு இந்நூல் எழுதிய ஏட்டுச்சுவடியொன்று திரிசிரபுரம் வித்துவான் சி. தியாகராஜ செட்டியாரிடத்திலிருந்து கிடைத்தது. தம்முடைய ஆசிரியருக்குப் பாடஞ் சொன்னவர் இயற்றிய நூலென்ற அன்பினால் அவர் இதனைத் தாமே எழுதி வைத்திருந்தார். இந்நூல் இப்பொழுது படிப்பவர்களுக்கு உபயோகமாக இருக்கும்படி சுருக்கமான குறிப்புரையுடன் வெளிப்

பெற்றது. இந்நூலில் அங்கங்கே வந்துள்ள தலவரலாறுகள் குறிப்புரையில் விளக்கப்பட்டிருக்கின்றன. இதன்கண் அமைந்துள்ள செய்திகள் தொகுத்து வகுக்கப்பெற்று ஆராய்ச்சிக் குறிப்பு என்னும் தலைப்பின்கீழ் எழுதிச் சேர்க்கப்பெற்றிருக்கின்றன.

இதனைத் தமது 'சிவநேசன்' பத்திரிகையில் வெளியிட்டுதவிய ஸ்ரீமான் ராம. கு. ராம. இராமசாமிசெட்டியாரவர்களது அன்புடைமை ஒருபொழுதும் மறக்கற்பாலது அன்று.

இதனை ஆராயும்பொழுதும் பதிப்பிக்கும்பொழுதும் உடனிருந்து உதவிசெய்தவர்கள் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி. மு. சுப்பிரமணிய ஐயரும், 'கலைமகள்' உதவிப்பத்திரிகாசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி. வா. ஜகந்நாத ஐயரும் ஆவர்.

'தியாகராஜ விலாசம்'
திருவேட்டீசுவரன் பேட்டை
17—10—33

இங்ஙனம்,
வே. சாமிநாதையர்.

---

# ஆராய்ச்சிக் குறிப்பு.

[எண்—செய்யுள் எண்.]

## 1. சிவசின்னங்கள் முதலியன.

| | | | |
|---|---|---|---|
| அக்கம், | 4, 40. | மறைச்சைவநெறி, | 3. |
| அஞ்செழுத்து, | 3, 35. | வில்வம், | 16, 79. |
| திருநீறு, | 3, 4, 40, 60. | | |

## 2. சிவபெருமான் அங்கங்கள்.

| | | | |
|---|---|---|---|
| ஆறுமுகத்தையுடையவர், | 73. | தலையோடு, | 88, 93. |
| இடபக்கொடி, | 91. | திருமால் விடை, | 6, 94. |
| இருசுடர்க்கண், | 69. | நெற்றிக்கண், | 46, 72, 91. |
| ஐராவணம், | 9. | பஞ்சமுகம், | 15. |
| கச்சணிந்த அரை, | 78. | பாசுபதம், | 34. |
| கொங்கைத் தழும்பு, | 95. | பிநாகவில், | 92. |
| கொன்றைமாலை, | 68. | பூதப்படை, | 55, 57. |
| சூலப்படை, | 42, 72. | மறைப்பரி, | 14. |
| தமருகக்கை, | 45. | மேருமலைவில், | 66. |

## 3. சிவபெருமான் அருட்செயல்கள்.

| | | | |
|---|---|---|---|
| அற்பொழுதில் ஆடியது, | 60. | திருமால் கண்ணலருச் சித்தது, | 27, 82. |
| ஆனைந்துமாடி, | 71. | பிரமனையும் திருமாலையும் இரண்டு பக்கத்தில் பெற்றிருத்தல், | 31. |
| இருபத்தெட்டாகமங்களை அருளிச்செய்தது, | 23, 60. | புலிக்குட்டிக்குப் பாலாழியளித்தது, | 70. |
| உமைக்குப் பாகம் அளித்தது, | 47, 76, 82, 87. | மதி, அரவு, கங்கை இவற்றைத் தாங்கியது, | 19. |
| கங்கையை ஏற்றருளியது, | 39. | வேடவுருவம்பூண்டது, | 12,33. |
| காளிக்குத் தோல்வியுறுத நடஞ் செய்தது, | 94. | | |

### 4. சிவபெருமான் பராக்கிரமங்கள்.


ஆமையோடணிந்தது, 21.
ஆலமுண்டது, 8, 10, 48, 98.
இராவணன் தோள்களைத் துவைத்தது, 7.
காலசங்காரம், 3.
சூரியன் பல்லைத் தகர்த்தது, 89.
தக்கயாகசங்காரம், 23.
புலித்தோலுரித்தது, 87.
மதியினைத்தேய்த்தது, 83.
மான்கன்றை ஏந்தியது, 52.
முப்புரத்தை எரித்தது, 2, 86.
யானைஉரித்தது, 57, 67, 84, 86, 93.


### 5. சிவபெருமான் பெருமை.


அன்னத்தா லறியப்படாதவர், 25.
சந்திரசேகரர், 63.
சமயத் தலைவர், 30.
சாமவேதத்தினன், 43.
திருமால் பன்றி வடிவங் கொண்டது, 27.
நீலகண்டர், 63.
மயானத்தில் ஆடுபவர், 63.
மலைக்கு மருகன், 18.


### 6. தலவரலாறுகள்.


இந்திரன் பூசித்தது, 37.
கதிரவர் போற்றியது, 47.
கழுகு தொழல், 29, 49.
கோடி உருத்திரர்கள் பூசித்தது, 34.
சம்பாதி கழுகாகிப் பூசித்தல், 43.
திருமால் பூசித்தது, 38.
நந்தி கருடனைச் சீறியது, 32.
நந்தி தவம்செய்தது, 35.
பன்றியும் பசுவும் முன்னையுருப்பெற்றது, 44.
பிரமதேவர் பூசித்தது, 39.
மாணிக்கவாசகர் குருவடிவம் கண்டது, 20.
மார்க்கண்டர் மாயிகளைச் சபித்தது, 36.
முனிவர் பாணினியப் பொருள் தெரிந்தது, 42,
மூவர் பாடியது, 15.
வசுக்கள் பூசித்தது, 40.
வண்டுவனப் பிள்ளையார், காப்பு, 1.
வேதம் மலையானது, 33.


### 7. மதுரைத் திருவிளையாடல்கள்.


கல்லானைக்குக் கரும்பருத்தியது, 47.
குண்டோதரற்கு அன்னக்குழி அளித்தது, 81.





சுந்தரப்பேரம்பெய்தது, 39.
தருமிக்குப்பொற்கிழி அளித்தது, 38.
நரியைக்குதிரையாக்கியது, 92.
நான்குவேதங்களையும் அருளிச்செய்தது, 81.
மண் சுமந்தது, 4, 37.


### 8. நாயன்மாரும் பிறரும்.


அப்பர், 15, 48.
இளையான்குடிமாறர், 65.
ஏனாதிநாதர், 61.
ஐயடிகள், 89.
கலிக்கம்பர், 17.
சாக்கிய நாயனர், 96.
சிறுத்தொண்டர், 13.
சுந்தரமூர்த்தி நாயனர், 54, 75.
சேக்கிழார், 1, 30.
சேரமான்பெருமாள், 59,64.
சோமாசிமாறர், 58.
திருஞானசம்பந்தர், 15,26,49.
திருநீலகண்டயாழ்ப்பாணர், 29. [100.
பூசலார், 28.
மூவர், 62.
வாயிலார், 51.


### 9. பிற தலங்கள்.


ஆலவாய், 24, 37, 38, 47, 49, 77, 81, 92.
கடலூர், 6.
கல்லாலடி (திருக்காளத்தி), 96.
குருக்கேத்திரம், 42.
சிராப்பள்ளி, 36.
தஞ்சாக்கை, 11.
தலையாலங்காடு, 8.
திருத்தலையூர், 32.
திருவக்கரை, 62.
திருவிற்கோலம் 41.
நாகைக்காரோணம், 98.
நெல்லை, 97.
பருப்பதம், 83.
பாசூர், 27.
புன்கூர், 85.
பொதியமலை, 44.
மறைக்காடு, 27.
மாவடி (காஞ்சி) 56, 95, 99.
வெள்ளிமலை, 3, 80.


186932

## திருக்கழுக்குன்றச் சிலேடை வெண்பாச் செய்யுள் முதற்குறிப்பகராதி.

[எண்—பக்க எண்.]


| | | | |
|---|---|---|---|
| அடியவர் போல் | 2. | சிட்டர்தொழு | 27. |
| அண்டர் தொழுங் | 5. | சீலமறை | 1. |
| அண்ணன் மொழி | 12. | சுருதிபயின் | 9. |
| அம்பரத்திற் | 2. | செங்கைமழுவோன் | 19. |
| அரணையவ | 11. | செச்சைமுலை | 24. |
| அணமருவு | 30. | செந்திருவனார் | 21. |
| ஆதியந்தமாகவிதி | 17. | செப்புமன்னர் | 28. |
| ஆம்பன்முகி | 8. | செம்பவள | 24. |
| இமிர்செம் | 6. | செவ்விமயில் | 18. |
| உட்டுறவோர் | 21. | சேந்தனடியர் | 23. |
| உய்வானோர் | 12. | சேரும் பிதிர் | 19. |
| உள்ளும் பரத்தையர்க | 17. | சேல்வெகுண்டு | 5. |
| எண்ணும் பிருகு | 13. | சேலோடு | 23. |
| எண்மாவசுக்க | 14. | சொற்பெரிய | 29. |
| ஏந்திழையார் | 6. | தாமரையம் | 8. |
| ஒப்பின்மன்னர் | 24. | தாரிலகு | 22. |
| கட்டங்கள் | 15. | தாவிலிளைஞர் | 18. |
| கண்ணரனார் | 9. | தானமிகு | 26. |
| கழுகு நடு | 17. | திக்கயமே | 26. |
| காட்டத்தெரியுங் | 16. | திங்கடவழ் | 2. |
| காமிகவாக்குக் | 16. | திருக்கழுக்குன்றத்து | 1. |
| குலவுமந்த | 7. | துன்னுபன்றி | 15. |
| குன்மம் | 4. | துன்னுமணஞ் | 28. |
| கைப்புக நல்கால் | 16. | தொண்டர்மடங் | 32. |
| கொன்றைமரத்தைக் | 3. | தொண்டின்மிகு | 7. |
| சங்கரனார் | 15. | நம்புகழைக் | 23. |
| சந்தக்கடம்பாவி | 32. | நல்லார்குடை | 20. |
| சந்தமிகுங் | 3. | நற்குலத்து | 27. |
| சந்துமிகும் | 9. | நிருத்தன்மகிழ்ந்து | 10. |
| சாலச்சிவகதை | 28. | நேருமொரு | 13. |
| சிங்கார | 31. | பஞ்சினடியார் | 20. |





| | | | |
|---|---|---|---|
| பரந்திழியு | 28. | மித்தையகல் | 22. |
| பிள்ளைமதி | 3. | முனிவர்கணம் | 15. |
| புரிவரும் | 29. | யாணர்மிகு | 25. |
| புலிகொள்பலாச் | 25. | வண்டுமொய்த்த | 2. |
| புனலுண் | 27. | வளத்தில்லறத்தோர் | 29. |
| பூமருவு | 18. | வாட்டமிலன் | 25. |
| பூவைசமயத் | 11. | வாய்ந்தகழை | 4. |
| பெட்கும் பொழின் | 31. | வாழ்கவா | 1. |
| பொற்பின்மட | 20. | வானதிதோ | 8. |
| பொன்றுழ் | 27. | வானார்மலைச் | 25. |
| பொன்னனையார் | 22. | விஞ்சிய | 14. |
| மதிதவழு | 7. | விஞ்சுகயலினங்கண் | 19. |
| மருவுபொழின் | 30. | விண்டுபிரமன் | 10. |
| மருவுமொரு | 12. | விண்டொடர் | 4. |
| மன்னுபுகழ் | 26. | விண்ணார்மதி | 3. |
| மாணிக்கப் | 4. | விதிசொற்படி | 14. |
| மாதர்நடங் | 6. | விரவுபொழி | 30. |
| மாதர்மலர்விழி | 20. | விரும்புமணிப் | 21. |
| மாந்தளிர்க்கை | 5. | விரும்புமலர் | 30. |
| மீண்டுமெயினர் | 11. | விளங்குமதி | 31. |


## பிழையுந் திருத்தமும்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| 3 | 17 | ஊர்விடையோன்—அடுதற்கு ஊர்ந்த | ஊர்விடையோன்—ஊர்ந்த |
| 4 | 10 | கைக்கரி - யானை; | கரி - யானை; |
| 8 | 22 | யாகம் | யாகமுமாம். |

உ

# திருக்கழுக்குன்றமாலை.

கட்டளைக் கலித்துறை.

1. மீனவ னாற்கன்று சம்புக் குலங்களை வீதியுள்ளே
சோனக னாகத் தூத்தும் பிராற்கிடஞ் சூன்முதிர்ந்த
ஈனவ னாக மிரைகண் டுமிழ்ந்த இயன்மணியைக்
கானக மாதர் கனலென்று மூட்டுங் கழுக்குன்றமே.

2. ஓரா யிரமறை யோங்குயி ராக வுடன்மலையாய்
நேரான சோதிக் கொழுந்தாம் பிராற்கிட நீண்டெழுந்து
பேராழி செய்யுந் தவத்தா லிடியெனும் பிள்ளைவந்து
காராழி நீர்கொண்டு பூசித்து மேவுங் கழுக்குன்றமே.

3. மல்லுஞ் சகடு மெருதுங் களிறு மருதுமன்று
வெல்லுங் கணைதொடு மேருவில் லாற்கிட மெய்யன்பினால்
அல்லும் பகலுநின் றஞ்செழுத் தோது மவர்களைப்போற்
கல்லு மருவியுங் கண்ணீர் சொரியுங் கழுக்குன்றமே.

4. குருவாரு மெய்யி லுருத்திரர் கோடி குலாவிவந்து
மருவா ரருச்சனை செய்யநின் றாற்கிட மந்திநின்று
செருவா லெறிமணிப் பச்சைக் கதிரைச் செழும்புலென்று
கருவா ருழைக்குல நாவால் வளைக்குங் கழுக்குன்றமே.

---



(ஆகலின் நீர்)
இனி—இப்போதாயினும் (தயைகூர்ந்து)
அது—(எனது) உண்மை யியல்பை
மொழி—கூறியருளுக.

ஆசாரியனது அநுக்கிரகத்துக்குப் பின் ஆன்மா சர்வ வியாபகத்துவத்தையும், சர்வஞ்ஞத்துவத்தையு மெய்துகின்றது. அவ் வநுக்கிரகத்துக்கு முன் அஃதேகதேச வியாபகத்துவத்தையும், கிஞ்சிக்ஞத்துவத்தையு மடைகின்றது. சங்கார காலத்திலோ அஃதெல்லா மொழிந்து தான்மாத்திரமாய்க் கிடக்கின்றது. ஆகவே, சர்வவியாபக சர்வஞ்ஞத்துவங்கள், ஏகதேச வியாபக கிஞ்சிக்ஞத்துவங்கள், இவையெல்லாம் போயநிலை யென்னுமிம் மூன்றில் ஆன்மாவுக்கு உண்மையாகவுள்ள வியல்பெது?

சர்வக்ஞத்துவமும், கிஞ்சிக்ஞத்துவமும் மாறுபட்ட தன்மைகள். ஒன்று பிரிதொன்றாக மாறாது. இரண்டும் ஓரே பொருளில் இருத்தலுமில்லை. இன்னும், அணுவுக் கணுவாதலும், மகத்துக்கு மகத்தாதலுமாகிய வியல்பு சிவபிரானுக்கே யுண்டு. ஆனால், ஆன்மா கிஞ்சிக்ஞத்துவத்தை விட்டுச் சர்வக்ஞத்துவத்தை யடைவ தெப்படி?

---

7. மொழிந்த வவத்தை முதலடியே னின்றாங்
கொழிந்தன நான்கு முணர—விழிந்தறிந்
தேறிற்றிங் கில்லை யெழில்வெண்ணை மெய்த்தேவே
தேறிற்றென் கொண்டு தெரித்து.

எழில்—அழகுபொருந்திய
வெண்ணை—திருவெண்ணெய்நல்லூரில் (எழுந்தருளியிருக்கின்ற)
மெய்த்தேவே—மெய்கண்டதேவரே!
அடியேன்—நான்
மொழிந்த—(ஐந்தென்று) கூறப்பட்ட
அவத்தை—அவத்தைகளில்
முதல்—சாக்கிரத்தை
நின்றாங்கு—அறிவதுபோன்று
ஒழிந்தன—மற்றைய
நான்கும்—நான்கு அவத்தைகளையும்
உணர—அறிய (வேண்டுமாயின்)
அறிந்து—சாக்கிர வறிவோடு (மற்ற வவத்தைகளில்)
இழிந்து—இறங்கவும்

இங்கு—(மீண்டும்) சாக்கிரத்துக்கு
ஏறிற்றில்லை—ஏறவுமுடியாதவனு யிருக்கின்றேன்.
(ஆகலின், நான் எல்லா வவத்தைகளையும்)
என்கொண்டு—எந்தவிதமாக
தேறித் தெரித்தது—அறிந்து(பிறர்க்குத்) தெரிவித்தது?

'தெரித்துத் தேறிற்று' என்பதைத் 'தேறித் தெரித்தது' எனமாறுக. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என அவத்தைகள் ஐந்து. சாக்கிரத்தில் ஆன்மாவுக்கு மற்ற அவத்தைகள் விஷயமாவதில்லை. ஆன்மாவும் சாக்கிர அறிவோடு மற்ற அவத்தைகளிற் பிரவேசிப்பதில்லை. ஆகவே, அது சாக்கிரத்தைப் போன்று மற்ற அவத்தைகளையுந் தெரிவது எப்படி?

---

8. தெரித்ததென் கொண்டெனை யுருத்திர பசுபதி
செடிய னேனையு மடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவுகாட் டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணை மெய்ய
வவத்தையிற் றெரித்தன னாயி னவத்தை
தெரித்தாங் கிரித்தலு மிலனே திருத்துங்
கால முதலிய கருவி யாயின்
மாலும் பிரமனும் வந்தெனை யடையா
ரோதுங் காலை யொன்றையொன் றுணரா
சேதந மன்றவை பேதைச் செயலிச்
சேதந வானுற் செயல்கொள வேண்டுநற்
போத மிவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ ரொன்று
மொருவுவ தறியே னுணர்வில னாதலி
னிற்கொடு கண்டன னாயி னெற்குக்
கருவி யாயினை பெருமையு மிலவே
யானே பிரமங் கோனே வேண்டா
வின்னுங் கேண்மோ மன்ன நின்னின்
முன்ன மென்ற னுணர்வில னாதலி
னென்னைக் காண்பினுங் காண்பல காணு
தன்னைக் காண்பினுங் காண்பல வொன்றோ
டொருங்கு காண்பினுங் காண்பல வருந்துனை



கண்ட வாறே தெனது கண்ணே
யண்ட வாண வருட்பெருங் கடலே.

உருத்திர—துன்பங்களை நீக்குபவரே!
பசுபதி—ஆன்மநாயகரே!
செடியனேனையும்—பாவியேனையும்
அடிமை செய்ய—ஆட்கொள்ளும் பொருட்டு
வடிவு காட்டில்லா—(தமது) உண்மையியல்பை மறைத்து
படிவங் கொண்டு—(ஆசாரியத்) திருமேனிதாங்கி
பெண்ணை ஆளும்—பெண்ணையாறு பாய்கின்ற
வெண்ணை—திருவெண்ணெய்நல்லூரில் (எழுந்தருளியிருக்கின்ற
மெய்ய—மெய்கண்டநாதரே!
மன்ன—ஞானராஜரே!
எனது கண்ணே—என்னறிவுக்கறிவானவரே!
அண்டவாண—சிவலோக நாயகரே!
அருட்பெருங் கடலே—கிருபாசமுத்திரமே!
(நான்)
எனை—என்னை
தெரித்தது—(வெளியிட்டுக்) கண்டது
என் கொண்டு—எப்படி?
அவத்தையில்—அவத்தைகளிற் (சென்று மீள்வதை வைத்து)
தெரித்தனன்—கண்டேன்
ஆயின்—என்பீராயின்,
(நான்)
அவத்தை—அவத்தைகளை
தெரித்து—(என்னின் வேறாகக்) கண்டு
இரித்தலும் இலன்—நீக்குகின்றேனில்லை.
(அல்லது நான் என்னைக்காண)
திருத்தும்—(ஆன்மசத்தியை) விளக்குகின்ற
காலம் முதலிய—காலம் (நியதி) முதலிய (தத்துவங்களே)
கருவி—கருவிகளாக (உபகரிக்கும்)
ஆயின்—என்பீராயின்,
(அவைகளே எனக்குப் போதுமாக)
எனை—என்பொருட்டு
(அவைகளின்கீழ்ப்பட்ட பிரகிருதி தத்துவங்களை
யுண்டாக்கவுங் காக்கவும்)

பிரமனும் மாலும்—பிரம விஷ்ணுக்கள்
வந்தடையார்—நிலைபெறுதல்வேண்டா.
ஓதுங்காலை—(இன்னும்) சொல்லுவதாயின்,
ஒன்றை—ஒரு கருவியை
ஒன்று—மற்றொரு கருவி
உணரா—அறியமாட்டாது.
அவை—அக்கருவிகளனைத்தும்
சேதநம் அன்று—அறிவுப்பொருள்களல்ல;
பேதைச்செயல்—சடத்தன்மையை (யுடையவை).

(ஆகையால் அவை)

இச் சேதநவானால்—அறிவுப் பொருளாகிய என்னாற்றான்
செயல்கொள வேண்டும்—தொழிற்படுதல் வேண்டும்.

(இன்னும்)

நல் போதம்—நல்ல என்னறிவு
இவற்றை—இக்கருவிகளை
புணர்வதை—சேர்ந்து விளக்கமுறுவதையும்
அறியேன்—(நான்) அறிகின்றிலேன்.
கருவித்திரளினும்—(எனக்கு உபகாரமாக) இத்தனை கருவிகளிருந்[தும்.
காண்பது—(நான்) அறிவது
ஓர் ஒன்று ஆய்—ஒவ்வொரு காலத்தும் ஒவ்வொருபுலனையே;
[(எல்லாவற்றையும் ஒருசேர வன்று).

(கருவிகளெல்லாம் என்னை விட்டு நீங்கினாலோ நான்)

உணர்வு இலன்—அறிவில்லாதவனாவேன்.
ஆதலின்—ஆகையால்,
ஒருவுவது—(அவைகள் என்னைவிட்டு) நீங்குவதையும்
அறியேன்—(நான்) அறியமாட்டேன்.

(அவைகளின் நீக்கத்தை)

நிற்கொடு—உமது உபகாரத்தால்
கண்டனன்—அறிவேன்
ஆயின்—என்பீராயின்,

(நீர்)

எற்கு—எனக்கு
கருவி ஆயினை—அறிவையெழுப்பும் தத்துவங்களிலொன்றானீர்.
[(ஆகவே)
பெருமையும் இல—கருத்தாவாதற்பெருமை யுமக்கு இல்லையாகும்.



(உம்மைக் கருவியாகக் கொண்ட)

யானே—நானே (கருத்தாவாகி)
பிரமம்—கடவுளாவேன்.
கோன்—(எனக்குத்) தலைவராக (நீர்)
வேண்ட—வேண்டப்படுதலில்லை.
இன்னும் கேண்மோ—இன்னுமொன்றைக் கேட்பீராக.

(அஃதாவது)

நின்னின்முன்னம்—உமது ஞானப் (பிரகாசத்தின்) முன்னே
என்றன் உணர்வு—எனது ஞானம்
இலன் ஆதலின்—மடங்கி நிற்பேனாகலின்,

(நான் உமது உபகாரத்தால்)

என்னைக்காண்பினும்—என்னைப் பார்க்கத் துணியினும்
காண்பு அல—பார்த்ததாகாது;
காணாது—(என்னைப்) பார்ப்பதைவிட்டு
உன்னைக்காண்பினும்—உம்மைப் பார்க்கத் துணியினும்
காண்புஅல—பார்த்ததாகாது;

(அங்ஙனம் பிரித்தறியாமல்)

உன்னோடு—உமது ஞானத்தில்
ஒருங்கு—(எனது ஞானங் கலப்பதாயிருந்து) அத்துவிதமாக
காண்பினும்—பார்க்கத்துணியினும் [(இருவரையுமே)
காண்பு அல—பார்த்ததாகாது (என்பதே).

(ஆகலின், நான் என்னைத் தரிசிப்பதற்கு உதவுகின்ற)

அருந் துணை—அருமையான துணையை
கண்டவாறு—பெறும் விதம்
ஏது—எப்படி? (கூறியருளுக).

ஆன்மா அவத்தைகளைத் தன்னின் வேறாகப் பார்த்தல் முடியாது. ஆகையால், அது தன்னைக் காண்பதற்கு அவத்தைகள் துணைசெய்வதெப்படி?

காலம் நியதி முதலிய அசுத்த தத்துவங்களும், ஏனைப் பிரகிருதி தத்துவங்களுஞ் சடம். அவை கருவிகளாக நின்று ஆன்மாவி னறிவை விளக்கும். தத்துவங்க ளில்லையாயின் ஆன்மாவுக் கறிவு விளக்க மில்லை. இவ்விரண்டுக்குமுள்ள வொற்றுமை நயத்தால் தத்துவங்களே ஆன்மாவெனச் சந்தேகிக்கவும் படும். ஆன்மா இத்தகைய தத்துவங்களை விட்டுத் தன்னைப் பிரித்துக் காண வேண்டுமாயின், அதனறிவை விளக்க வேறு துணை

யேதேனும் வேண்டும். வேண்டாதாயின் அது தன்னைக் காண்பதற்குத் துணையாவ தெது?

இறைவனே துணையெனின் அவனுந் தத்துவங்கள் போன்று ஆன்மாவுக்குக் கருவியே யாவன். ஆகவே, கர்த்தாவென்னும் பெயர் அவனுக்கு எடுபடும். படலும், ஆன்மாவே இறைவனையுந் தத்துவங்களையுங் கருவியாகக்கொண்ட கருத்தாவாவன். அங்ஙனமாயின், அது தன்னைக் காணக் கடவுள் துணையாதல் கூடுமா? இன்னும், சிவப்பிரகாசத்தில் ஆன்மப் பிரகாசம் ஒளிமழுங்கும். அப்போது ஆன்மா தனது மடங்கிய அறிவால் தன்னையுங் காணமுடியாது; சிவத்தையுங் காணமுடியாது. இனி, மடங்குகின்ற ஆன்மப் பிரகாசம் மடக்குகின்ற சிவப்பிரகாசத்திற் கலத்தலு முடியாது. அங்ஙனமாயின், அது தன்னையுஞ் சிவத்தையும் ஒருங்கு பார்த்தலுமில்லை. பின்னை, ஆன்மா தன்னைக் காண்பதற்கு உபகரிக்குந் துணையெது?

---

9. கடலமுதே வெண்ணைக் கரும்பேயென் கண்ணே
யுடலகத்து மூலத் தொடுங்கச்—சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
மருவியா தென்றுரைக்க மன்.

கடல் அமுதே—பாற்கடலினின்றெழுந்த அமுதம் போன்றவரே!
வெண்ணை—திருவெண்ணெய் நல்லூரில்
கரும்பே—கரும்பையொத் தெழுந்தருளி யிருக்கின்றவரே!
என் கண்ணே—எனக்குக் கண்போன்றவரே!
மன்—ஞானராஜரே!
(நான் உறங்கும்போது)
உடலகத்து—(என்) உடலில்
மூலத்து—துரியாதீதத்தில்
ஒடுங்க—அடங்கிக் கிடப்ப
ஆங்கு—அப்போது
உணர்த்த—(என்னை) யெழுப்புதற்கு
சடலக்கருவி—(என்) உடற்கருவிகளுள்
யாது—எக்கருவி (உதவுகின்றது?)
(நான் எழும்போது)
என்னை மருவி—எக்கருவியைப் பற்றிக்கொண்டு
காண்பது—எழுவேன்?
யாது என்று—அக்கருவி யாதென்று



உணர்க்க—(நீர்) கூறியருளுக.

ஆன்மாவின் அயர்ந்த நித்திரையில் தத்துவங்கள் நீங்கிநிற்கின்றன. அங்ஙனமாயின், அதையெழுப்புங் கருவி யெது? ஆன்மா எக்கருவியைப் பற்றிக்கொண் டெழுகின்றது?

---

10. மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
யன்னிய மாக்கி யருள்வழி யதனை
லென்னுள் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக நின்னோ
டொருவுத லின்றி யுடந்தையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டு மருவிடு
மும்மல மதனை லெம்முணின் றிலையெனி
னம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வில ளுகும் பெரும தீர்வின்
றமைந்த கருமத் தியைந்தவை யல்லது
சமைந்தன விலவெனச் சாற்றி னமைந்த
மாயையங் கன்ம மாமல மூன்று
மாயா தாகவே யார்ச்சக மாயையி
னுற்பவந் தீரா தொழுகுமொன் றொன்றி
னிற்சம மாயி னல்லது நிற்பெற
லில்லென மொழிந்த தொல்லறந் தனக்கு
மேயா தாகு நாயே னுளத்து
நின்றனை யென்பனோ நின்றிலை யென்பனோ
பொன்றிய பொன்றிற் றிலமல மென்பனோ
வொன்றினை யுரைத்தருண் மன்ற குன்றாப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணைக் கதிபதி
கைகண் டலைவாய் கால்செவி மூக்குயர்
மெய்கொண் டென்வினை வேரறப் பறித்த
மெய்கண்ட தேவே வினையிலி
மைகொண்ட கண்ட வழுவிலென் மதியே.

முன்னை—அநாதியாகிய
திரிமலம்—மும்மலங்களையும்

தீர்த்த—(எனக்கு) இல்லையாகச்செய்த
தேசிக—தேசிக மூர்த்தியே!
பெரும—பெருமானே!
குன்றா—குறையாத
பெண்ணைப் புனல்—பெண்ணையாறு (பாய்கின்ற)
வயல்—வயல்கள் (சூழ்ந்த)
வெண்ணைக்கு—திருவெண்ணெய் நல்லூர்க்கு
அதிபதி—அரசரே!
கை கண் தலை வாய் கால் செவி மூக்கு—கை கண் முதலிய வுறு
உயர்—விளங்குகின்ற [புக்க
மெய்கொண்டு—திருமேனிதாங்கி (ஆசாரியனாக வெளிப்பட்டு)
என்வினை—எனது ஆகாமிய சஞ்சித பிராரத்தங்களை
வேர் அற—அடியோடு இல்லையாகும்படி
பறித்த—களைந்தெறிந்த
மெய்கண்ட தேவே—மெய்கண்ட தேவரே!
வினை இலி—கன்மபந்த மில்லாதவரே!
மை கொண்ட கண்ட—(விஷக்) கறுப்பேறிய கண்டத்தையுடை
[யவரே!
என் வழு இல் மதியே—எனக்குக் குற்றமற்ற ஞானப்பிழம்பாயிருப்
[பவரே!
மன்னிய—(என்னை யநாதியே) பந்தித்த
கன்மச் சமத்திடை—இருவினைகளுந் துலையொத்த காலத்தில்
(நீர்)
மலங்களை—(எனது) மும் மலங்களையும்
அந்நியம் ஆக்கி—நீக்கி
அருள்வழியதனால்—(உமது) அநுக்கிரக வாயிலாய்
என்னுள்—என்னிடத்தில்
புகுந்தனை எனின்—கலந்து வதிவீராயின்
(அம்முத்தியில் நான் உம்மினின்றும்)
ஒருவுதல் இன்றி—விலகுதலின்றி
நின்னோடு—உம்மோடு
உடக்கை ஆகும்—அத்துவித மாதலாகிய
பெருநிலை—உயர்ந்த கதியை
ஆகல் வேண்டும்—பெறுதல்வேண்டும்.
(ஆனால் இப் பெத்தத்தில்)
மும்மலம்—மூன்று மலங்களும்

# செய்தித் திரட்டு.

**அநுதாபம்:**—பரம்பரைத் திருப்பணிச்செல்வர் வழித்தோன்றலும் மகா வித்துவ சிரோமணியும் ஆகிய அமராவதிபுதூர் திருவாளர் வயி. நாக. ராம. அ. இராமநாதச் செட்டியாரவர்களின் அருமை மனைவியார் வள்ளியம்மையாச்சி புரட்டாதி உஅ-வெள்ளிக்கிழமை நண்பகல் தசமியில் மதுரைமூதூரில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் திருவடிநீழலை அடைந்த செய்தியறிந்து, அவ்வம்மையாரின்பிரிவுகுறித்து அநுதாபமுறுகின்றோம். அருந்ததியனைய கற்பரசியாகிய அவ்வம்மையாரின் ஆன்மா சிவானந்தவாரியிற் றிளைப்பதாக! அவர்தம் மணாளர்கூறிய இரங்கற்பாக்கள் 43,44-ஆம் பக்கங்களிற் காணலாம். அச்செய்யுட்கள் மனையற மாட்சியிற் சிறந்த அவ்வம்மையாரின் குணஞ்செயல் நலங்களை மிகவுருக்கத்துடன் உள்ளவாறே விளக்குவனவா யிருக்கின்றன. திருவள்ளுவர் இல்லறவொழுக்கத்திற் சிறந்து விளங்கிய தமதுமனைவி வாசுகியம்மையாரை 'அடிசிற்கினியாளே...'என்ற தொடக்கச் செய்யுட் கூறிப் பாராட்டியவாறே, கற்புடைப் பெண்டிரின் பிரிவுக்கிரங்கிப் பாக்கள் கூறுதல் கல்வியிற் சிறந்த கணவர்க்குரித்தே.

1. இதம்பெறுநல் வடிவுடையா ளிடம்பிரியா வளரொளியா
 ரிருபொற் றாளை
 நிதம்பரவுந் திருநெடுமால் வளரரியக் குடிப்பதிக்க
 ணிதிக்கோ னான
 சிதம்பரவே டவப்புதல்வன் சாத்தப்பன் றவப்புதல்வி
 திருவார் மாதர்
 பதம்பரவு மெழிலுடைய வள்ளியம்மை யெனுங்கமலப்
 பாவை போல்வாள்.

2. சீராருஞ் செல்வியவள் பதினான்கா மகவைதனிற்
 செகத்தோர் போற்றும்
 வாராருங் கொங்கைமலர் வாடாத மங்கைமரு
 தீசர் பாதத்
 தாராத காதலுறும் ராமநா தத்தனதற்
 கன்பு மிக்க
 ஏராரு மனைவியெனப் பிரமாதி மிதுனரவி
 யின்பத் துற்றாள்.

3. உத்தரநாள் ரத்தாட்சிப் பங்குனியிற் றன்கணவற்
 குரிய வாறு
 பத்தாறுமாண் டினிற்புரியு மாசாந்தி நன்மணமும்
 பாங்காய்க் கொண்டே
 இத்தரணி தனிற்சுகமே வாழ்ந்துஸ்ரீ முகக்கன்னி
 யிருபத் தெட்டில்
 வித்தகமார் வெள்ளிகிருட் டினதசமி வியன்கயிலை
 மேவி னாளே.

**பொழுது போக்கு:**—செங்கற்பட்டுச் சில்லாப் பொன்னேரியூர்க் கடைத்தெரு அநுமார் கோயிலில் சனியிராத்தோறும் ஒருபஜனை நடந்து வருகிறது. சீப் இஞ்சினியராபீஸ் டிராப்ட்ஸ்மேன் திரு-டி-ஸ்ரீநிவாஸ ஐயங்கார், சீப் இஞ்சினியராபீஸ் ரிகார்ட் ஸெக்ஷன் முதல் அஸிஸ்டெண்ட் திரு-கே-ரகுபதி ஐயர், பள்ளிக்கூட டிப்டி இன்ஸ்பெக்டராபீஸ்-கிளார்க் திரு-சுப்பிரமணிய ஐயர், டாக்டர் திரு. டி. ஏ. சாம்பசிவன் எல். எம். பி, தலைமையுபாத்தியாயர் திரு. ஈ. வெங்கய்யா, நிலச்சுவான் திரு. ராமண்ணா, காரச்சி திரு. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் முதலியவர்கள் அக்கோட்டியிற் சேர்ந்தவர்கள். அவர்களெல்லாம் பிரமுகர்களே. ஆயினும், அப்பஜனையில் அவர்கள் செய்வன குத்துவிளக்கைச் சுற்றிச்சுற்றிவந்து கும்மியடித்தல், கோலாட்டமாடல், நாமாவளிபாடல் முதலியனவே. அவை சுமார் மூன்று மணிநேர வேலையாகும். கும்மியடித்தல் முதலியன வெறும் பக்திமார்க்கம். அவ்வளவு பெரியபிரமுகாள் அவற்றைமட்டுஞ் செய்து காலத்தைப் போக்கல் போதுமா? சமயசாத்திர வாராய்ச்சி பிரசங்கம் முதலிய ஞானமார்க்கத்தையன்றோ அவர்கள் பெரிதும் போற்றவேண்டும்? அப் பொருட்டும் மாதந்தோறும் இரண்டொரு சனிகளையாவது அவர்கள் செலவிடின் லோகோபகாரமாயிருக்கும். நானும் அதைப்பற்றி அவர்களிடம் அடிக்கடி சொல்வதுண்டு. என் வயசின் சிறுமை நோக்கிப்போலும் அவர்கள் அதனைச் செவியேற்பதில்லையென ஷையூர் திரு.தி.ம.ஸ்ரீநிவாசையங்கார் தெரிவிக்கிறார்.

* உத்தியோகத்துறையில் மேம்பாடுற்று விளங்கும் அறிஞர்கள் பத்தியில் ஈடுபட்டிருத்தல் பாராட்டத்தக்கதே. பத்திவலையிற் படுவோனாகிய பரமபதிக்கும் பசுக்களுக்குமுள்ள அணுக்கத் தன்மையை யுணர்ந்துகொண்டாற்றான் பக்தி நிலைநிற்குமாதலால், சமயசாத்திர ஆராய்ச்சி விரிவுரைகளையும் மேற்கொள்ள வேண்டுவது இன்றியமையாததே. "பூசமுனைவேல் சிறுவருரையுங் கொள்க." என்பது பெரியார் திருவாக்கு.

**தேவகோட்டை:**—சரஸ்வதிவாசக சாலையின் எட்டாவதாண்டு விழா புரட்டாதி கசூஉ சென்னை நவசக்தி ஆசிரியர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் தலைமை வகிக்க நகரத்தார் ஹாலில் நடைபெற்றது. பண்டிதமணி திரு. மு. கதிரேசச் செட்டியார் "கம்பரது நினைவாற்றல்' பற்றியும், தேசபக்தர் திரு. ராய. சொக்கலிங்கனார் "இராமன்தம்பி' என்பதுபற்றியும் சொற்பொழி வாற்றினர். இவ்வாசகசாலையின் எட்டாவதாண்டு அறிக்கையால், இதன் அங்கத்தினர்கள் இயல்-இசை-சீர்திருத்தம்-சீவகாருணியம்—தேகப்பயிற்சி—தேசீய இயக்கம்—பத்திரிகாபிமானம் விருத்தியாகும் துறைகளில் மிக வூக்கத்துடன் உழைத்து வருகின்றனரென விளக்கமாகிறது.

**பரிமணங்குடி:**—ஸ்ரீசண்முகநாத சுவாமிகோயிலில், ஆவணிமீ கார்த்திகை நாளிலும், புரட்டாதிமீ நவமியிலும், கார்த்திகை நாளிலும் அபிடேக ஆராதனைகளும், சைவ சன்மார்க்க பிரசங்கங்களும் ஷைகோயில் சபைகளின் உரிமைத் தொண்டர் திரு. மு. முத்துப் பிள்ளை யவர்களால் நடைபெற்றன. இம் மதி கூஉ முதல் அஉ வரை கந்தர்சஷ்டி நடைபெறும்.

**அண்ணாமலைப் பல்கலைக்கழகம்:**—இதில் சென்னை மாகாண கவர்னர் துரையவர்களின் தலைமையில், 26—10—33 காலை 8 மணிக்கு ஒரு கூட்டம் அசம்பிளி ஹாலில் கூடப்பெறும்.



**காந்தை:**—தமிழ்ச்சங்கக் கல்லூரியின் பதினேழாவதாண்டு விழா, புரட்டாதி கஙஉ, தஞ்சை மாநாட்டாண்மைக் கழகத்தலைவர் திருவாளர் ஆ. பழ. நா. வயி. நாடிமுத்துப் பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெற்றது. பெருந்திரளான அன்பர்கள் குழுமியிருந்தனர். தலைவர் செந்தமிழ்க் கல்வியும், தேசபக்தியும் சிறந்துவிளங்கப் பேரார்வத்துடன் கெம்பீரமான நெடியமுகவுரை யாவரும் வியக்குமாறு கூறினர். வாழ்க்கைக்கான கல்வியைப்பற்றி மன்னார்குடி கௌமார குருகுலத் தலைவர் திரு. சு. வி. கனகசபைப் பிள்ளையவர்களும், 'புறநானூறு' என்பதுபற்றி உரத்தநாடு தமிழாசிரியர் திரு. அ. பொன்னண்ணா களத்தில்வென்றா ரவர்களும், கம்பராமாயணத்தைப்பற்றித் தஞ்சை சப்ரிஜிஸ்தரார் திரு. சதாசிவப் பிள்ளையவர்களும் மெய்ப்பாடு தோன்றச் சொற்பொழி வாற்றினர். "வள்ளல் பேகன்" தமிழ்நாடகம், கல்லூரி மாணவர்களால் நடிக்கப்பெற்றது. சங்கத் தலைவர் திரு. உமாமகேசுவரம் பிள்ளையவர்கள் அனைவர்க்கும் நன்றிகூற இனிது நிறைவேறியது. கசுஉ 'பஞ்சாபகேசன்' கழக ஆண்டுவிழா—மாணவர் பந்தயவிளையாட்டுடனும், கஉஉ கலைமகள் திருவிழா—கண்காட்சி கூடத்திறப்பு பரிசளிப்பு முதலியவைகளுடனும், தஞ்சை பெண்களாசிரியர் பயிற்சிக்கல்லூரித் தலைமையாசிரியர் திரு. V. செல்லம்மாள் B. A. L. T. அவர்கள் தலைமையில் கல்லூரி மாணவர்களின் கட்டுரைகளுடனும், ஷை மாணவர்களால் ஓர் ஆங்கில நாடகமும் நடைபெற்றன.

இக் கல்லூரியிற் பயிலும் ஏழைமாணவர் இல்லத்துக்கு ஓர் அன்பர் ஓராயிரரூபா தாமே மனமுவந்து உதவிய பெருந்தகைமைத்திறன் சங்கத் தலைவரால் பெரிதும் பாராட்டப்பெற்றது.

**கானாடுகாத்தான்:**—தனவணிகத் திருவாளர் சா. ராம. சித. அவர்களின் மாளிகையில், சென்னை மகா-ா-ா-ஸ்ரீ T. N. சேஷாசலமையர் அட்வகேட் அவர்கள், மாதமிருமுறை வந்து ஒவ்வொரு முறையும் இருதினங்கள் தங்கி, தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகவும் இலகுவான நடையில் இலவசக்கல்வி கற்பிப்பார்கள். பதினெட்டு மாதங்களுக்குள் இவ்விருமொழிகளிலும் யாதொரு செலவு மின்றித் தேர்ச்சிபெறத்தக்க இச்சந்தர்ப்பத்தைத் தனவணிகநாட்டு இளைஞர்கள் கைவிடாது பயன்படுத்திக்கொள்ள, இக் கலாநிலையக் கழகக் காரியதரிசி திருவாளர் சா. ராம. சித. செம்புலிங்கஞ் செட்டியார் வேண்டிக்கொள்கிறார்கள். இக் கழகத்தில் பிரமுகர்களாகிய இருபது நிருவாகஸ்தர்கள் சேர்ந்துள்ளார்கள்.

**திருச்சிக்கல்:**—நவநீதேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் சிங்காரவேலாயுத சுவாமிக்குக் கந்தர்சஷ்டி மகோற்சவம் இம்மதி கூஉ முதல் ஷை தேவஸ்தான தருமகருத்தரும் திருப்பணிச் செல்வருமான கரு. முத்து. அளகப்ப செட்டியாரவர்களால் வழக்கம்போற் சீருஞ்சிறப்புமாக நடைபெறுகிறது. இன்று ஐந்தாந்திருநாள் இரதோற்சவமும், நாளை சூரசம்மாரமும்—இந்திரவிமானப் பவனியும், கூஉ சொர்ணமயூரவாகனக் காட்சியுடன் க்ஷீர புஷ்கரணியில் தீர்த்தவாரியும்—அன்றிரவு தெய்வயானையார் திருமணமும்—புஷ்பப் பல்லக்கில் திருவுலாவும், யஉ வள்ளிதேவியார் திருமணமும்—புஷ்பவிமானத் திருவுலாவும்—யகஉ விடாயாற்றியும், யஉஉ சுவாமி சேர்க்கை சேர்ந்தருளலும் சிறப்பாக நடைபெறும். அன்பர்கள் தெரிசித்து இன்புறுவார்களாக!

**கீழச்சிவற்பட்டி:**—இம் மதி ௯௨ தொடங்கி சிவாலயத்தில் கந்தர் சஷ்டி விழா நடைபெறுகிறது. நாளை சூரசம்மாரமும், ௯௨ திருக்கல்யாண மகோற்சவமும் நடைபெறும்.

அகில இந்திய சாதுசங்க மகாசபையின் ஸ்தாபகரான உயர்திரு கருணானந்த சுவாமிகளின் 75-வது ஆண்டுவிழா, இம்மதி ௫, ௬, ௭-களில் ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் ஆலயத்தில் அபிடேக ஆராதனை, சாதுக்கள் மடத்திற் சமாராதனை, மீனாட்சி சுந்தரேசுவரர் கலாசாலையில் அரியபெரிய விரிவுரைகள் ஆகியவற்றுடன் திருவருளாற் சிறப்புற நடைபெறுவதாக ஷை மகாசபையார் அழைப்புத்தாள் வழங்கி அன்பர்களை அழைத்துள்ளார்கள்.

**ஆத்தங்குடி:**—சநாதனதர்மமகாசபை புரட்டாதி ௬௨ மாலை ௬ மணிக்கு ஆரம்பமாயிற்று. ஸநாதனதர்மிகளாகிய திருவாளர்களுள் குறிச்சி தர்க்கவித்வான் இராமபத்திராச்சாரியார் கடவுள்வாழ்த்துக்கூற, சோதிடம் மணவாளையங்கார் பிரேரேபிக்க, சிவநேசன் இராமசாமி செட்டியார் தலைமைவகித்து, ஸநாதன தர்மிகள் விரோதிகள்பால் வெறுப்பின்றி ஸநாதனதர்மத்தை வளர்க்கவேண்டுமென்னும் தம்கருத்தை விளக்கி முன்னுரைகூறினர். ஸநாதனிகளின் கடமையைப்பற்றி வேதசாஸ்திர வித்வான் கல்யாணசுந்தர கனபாடியவர்களும், ஆசாரியார்களின் கடமையைப் பற்றி குறிச்சி தர்க்க வித்வான் இராமபத்திராச்சாரியாரும், காந்தியாரின் அரிஜன சேவா விபரீதத்தை சு. வீர. கதிரேசச் செட்டியாரும், 'தருமத்தை'ப்பற்றி முத்துச்சாமி ஐயங்காரும், நமது 'மதம்' என்பதை ஜெகதீச ஐயரும் பேசினர். தலைவர் அவைகளைத் தழுவி முகவுரை கூறினர். இராமபத்திராச்சாரியாரால் வந்தனங்கூற, சந்தனாதிகள்வழங்கி பத்துமணிக்கு இனிது நிறைவேறியது.

அன்றையத்தினம் மகார்கள் கிலுக்கு எடுத்து வந்தனர். நகரவாசிகளனைவரும் சிவாலயத்துக்கு வந்து தெரிசிக்கலாயினர்.

புரட்டாதி ௯௨ சநாதனதர்ம மகாசபையார் கீழச்சிவப் பட்டியில், ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசர் கலாசாலைக்கு முன்னாக, தமிழ்வித்துவான் திரு. இராமச்சந்திர ஐயர் தலைமையில் கூடி விரிவுரைகள் நிகழ்த்தினர்.

இம்மதி ௯௨ பலவான்குடியிற் பிள்ளையார் கூடத்துக்கு முன்பாக, குன்றக்குடி பிரமஸ்ரீ சுப்பிரமணிய சாஸ்திரியார் தலைமையிற்கூடி, திருவாளர்களான கல்யாணசுந்தர கனபாடிகள், சு. வீர. கதிரேசச் செட்டியார், சிவநேசன் இராமசாமி செட்டியார், இராமபத்திராசாரியார் ஆகியவர்க[ள்] விரிவுரை நிகழ்த்த, மதவிஷயத்தில் சட்டசபைகள் தலையிடக் கூடாதெ[ன்]றும், புதிய அரசாங்க அமைப்பிலும் மதப்பாதுகாப்பு வேண்டுமென்று[ம்] ஆலயப்பிரவேச மசோதாவை மடாதிபதிகள் முதலான வைதீகர்களிட[த்]திலேயே சர்க்குலேட் செய்யவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறை வேற்றினர்.

ஆவணி ௯௨ கனம் செட்டிநாட்டுராஜா ஸர், அண்ணாமலைச் செட்டியாரவர்கள் விஜயஞ்செய்திருந்தபோது, இவ்வூருக்குச் சாலைவசதி யுண்[டு] பண்ணும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டதுடன், அவர்கட்குச் சிவால[ய] தெரிசனம் செய்துவைத்து, வெள்ளிரதமாகிய திவ்யவூர்திகளையும், வா... யின் மகிமையையும், ஓரே நெற்றி... யுடன் விளங்கும் தென்... முதலானவைகளையும் கா... ப்பெற்றது.

# செய்தித் திரட்டு.

**பட்டமும் பரிசும்:**—கல்வியறிவு, பரோபகாரம், ஜீவகாருண்யம் என்பனமிக்க பெரியார் பலர் பண்டைநாள் வைகினர். இக்காலமும் சிலர் ஆங்காங்கே இலைமறைகாயென்ன இலகுகின்றனர். ஆங்கிலம் பயின்றார்க்குப் பட்டம் அதிகம் கிடைக்கின்றது. பணச்செலவிலும் பட்டம்பறக்கின்றது. செந்தமிழ்ப் புலமைக்குப் பரிசிலும் பட்டமும் முன்னாள் நல்கினர் பெருநிலமன்னரும் குறுநிலமன்னருமாவர். சமயத் தொண்டுக்கும் தமிழ்மொழிப் பயிற்சிக்கும் மதிப்பளிப்பது நம் தமிழகப் பிரமுகர் கடமையாகும். தென்றமிழும் வடமொழியும் சமயப்பணியும் கைம்மாறுகருதாது ஆற்றிவரும் மகிபாலநகர் திருவிளங்கு பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியாரவர்களுக்கு 'மகாமகோபாத்தியாயர்' என்னும்பட்டம் கிடைக்கக்கூடும் என்று கேள்வியுற்று மகிழ்கின்றோம்.

**பூப்பின்:**—முருகானந்த சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவு விழா இம்மதி ௨௰ முற்பகல் பிற்பகல்களில் திரு. வெ. சாமிநாதசர்மா அவர்கள் தலைமையில், சுதேசியம்—பர்மாவில் செட்டியார்கள் நிலைமை—ஒற்றுமை—வேடிக்கைப் பஞ்சாயத்து—கல்வி—சீர்திருத்தம்—கதர்—கொல்லாமை—சங்கத்தினவசியம் ஆதியவிரிவுரைகளுடன் நடைபெறுமென ஷை சங்கத்தார் அன்பர்களுக்குத் திருமுகம் வழங்கி அழைக்கின்றார்கள்.

**தீபாவளி முட்டாள்தனம்:**—என்று குடியரசில் வெளியிட்ட சுயமரியாதைத் தோழர், தீபாவளிப் பண்டிகை சோம்பேறிகளாற் கொண்டாடப் படுவதென்றும், அதனால் உண்டாகின்ற கெடுதிகள் பலவென்றும், கதர் தரிப்பது அரிசியலுக்காக மலத்தைச் சாப்பிடுவதாகு மென்றும் எழுதியிருப்பதைக் கண்டித்து, கொண்டாடாதபேர்களே சோம்பேறிகளென்றும், தீபாவளி கொண்டாடி யெண்ணெய் தேய்த்துத் தலைமுழுகிப் புத்தாடை புனைதலாற் புனிதத்தன்மை யுண்டாவதன்றி யாதொரு கெடுதலு முண்டாவதில்லையென்றும், நம் மானத்தைக்காக்க நாமே சுயமாகவோ, நம் நாட்டவர்களாலோ நெய்யப்பெறும் ஆடை அணிவதே சுயமரியாதை யென்றும், ஆதலால் முட்டாள்தனம் யாருக்கு உரியதென்பதை யுணரும்படிக்கும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து வித்துவான் இரண்டாவது வகுப்பிற் பயிலும் P. ஆறுமுகப் பெருமாள் அறைகின்றார்.

**இதுவா புத்தமதம்?:**—காந்திஜி புத்தமதத்தை ஹிந்துமதத்தின் புதுவழியாகச் சொல்லுகிறார். ஹிந்துமதத்தில் புதுவழி பழையவழி என்று ஏதாவது பேதமிருக்கிறதா? ஆஸ்திக வழியிலுள்ளது ஹிந்துமதமென்றும் நாஸ்திகவழியிலுள்ளது புத்தமதமென்றும் பிரசித்தமானது. ஆஸ்திகமதம் நாஸ்திகமதமாக மாற்றப்படமுடியுமா? நாஸ்திக மதமாக ஆஸ்திகமதம் மாறிவிட்டால் ஹிந்துமதம் எதற்காக? ஆகவே, ஹிந்துமதமும் புத்தமதமும் ஒன்றென்று சொல்லுவதும் புதுவழியாகவே இருக்கிறது.

**கர்ப்பத்தடைப்பிரசாராக்ஷேபம்:**—ஸ்ரீமான் ஏ. டி. பன்னீர்செல்வம் [க]ர்ப்பத்தடை சம்பந்தமாக நமது கவர்ன்மெண்டார், ஆஸ்பத்திரிகளில் [பி]ரசாரம் செய்வதாகவிருப்பதை விட்டுவிடவேண்டுமென்று அடுத்த சென்னைச்சட்டசபைக்கூட்டத்தில் ஒரு தீர்மானங் கொண்டுவரப் போவதாகத் [தெ]ரிகிறது.

---

# சிவநேசன்.

இப் பத்திரிகை ஒவ்வொரு தமிழ்மாத முதற்றிங்கட்கிழமைதோறும் மேன்மைமிக்க புலவர் பெருமக்களாலும் உண்மைப் பெரியோர்களாலும் வரையப்பெறும் சமயவுண்மை தமிழின் இனிமை சாதியவொழுக்கங்களின் நன்மை யாதிய கட்டுரை பலவும் உலக நிகழ்ச்சிகளும் தன்னுட்கொண்டு வரும்.

## ஆண்டுத்தொகை விவரம்.

| | | | |
|---|---|---|---|
| உள்நாட்டிற்கு ரூ | 2 4 0 | அதற்கு மூலதனம் ரூ | 30 0 0 |
| அயல்நாட்டிற்கு ரூ | 3 0 0 | அதற்கு மூலதனம் ரூ | 40 0 0 |

தனிப்பிரதி அணா 0 3 0

## விளம்பர விகிதம்.

வியாபார விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 4 0 0

நீதிமன்ற விளம்பரம் பக்கம் 1-க்கு ரூ 8 0 0

## நிருப நேயர்கட்கு அறிவிப்பு.

க. நமது சிவநேசனுக்கு நிருபம் வரைவோர் நமது பத்திரிகைநேயராயிருத்தல்வேண்டும். உ. வரையும் விஷயங்கள், சமயநிந்தனை, சாத்திர நிந்தனை, தெய்வநிந்தனை, ராஜநிந்தனை ஆதிய நிந்தனைகளில்லாமலும், எவரையுங் குறிப்பிட்டுத் தாக்காமலும், பொதுவாகவும் நன்மை பயப்பனவாகவு மிருத்தல் வேண்டும். ங. பிழையின்றி நல்ல மையினால் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தெளிவாகவும் எழுதல்வேண்டும். ச. வருங் கடிதங்கள் கட்டுரைகளைப் பொருத்தமாகத் திருத்திப் பிரசுரிக்கவும், பொருத்தமில்லாதவைகளைப் பிரசுரியாதுவிடவும் கூடும். ரு. பிரசுரிக்கப்படாத கடிதங்கள் கட்டுரைகள் திருப்பி யனுப்பப் படமாட்டா. சு. கடிதக்காரர்களின் அபிப்பிராயங்கட்குக் கடிதக்காரர்களே பொறுப்பாளிகளாவர்.

## சிவநேசன் அச்சுக்கூடம்

இவ் அச்சுக்கூடத்தில் நன்முகூர்த்தப் பத்திரிகை முதலிய எல்லா வித அச்சுவேலைகளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் நயமாக அவரவர் மனதிற்குகந்தவண்ணம் குறித்த காலத்தில் அச்சியற்றித் தருகின்றோம். அவைகட்குக் காகிதங்கள் அனைத்தும் எங்களிடத்து உள்ளன.

அமைச்சர்.